# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

மலர்: XII இதழ்: 4 | அக்டோபர் 2025 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: XII Issue: 4 | October 2025 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20





யாருக்காக உழைக்கிறீர்கள்!

- ஆசிரியர் கடிதம்

இசை பயணத்தில் இளையராஜாவின் 50 ஆண்டுகள்!

செக்கிழுத்த செம்மல் வ.உ.சி-யின் தியாக வரலாறு!

துளசி தண்ணீரில் மருத்துவ குணங்கள்!

ஒரு லட்சம் ரூபாயை நெருங்கும் ஒரு சவரன் விலை: தங்கத்தின் முதலீடு செய்யலாமா!

## 1972 அக்டோபரில் எம்.ஜி.ஆர். தொடங்கிய 53 வருட கட்சி!

## 2017-ல் ஜெயலலிதா மறைவுக்குப் பின் அ.தி.மு.கவில் அடிக்கடி தலையிடும் பா.ஜ.க.!

# மித்ரா டைம்ஸ் ஆசிரியர் / மித்ரா குழும நிறுவனர் / பீப்பிள் ஸ்டார் எம்.எஸ்.மூர்த்திக்கு பிறந்தநாள் வாழ்த்து!









ஆசிரியர் கடிதம்

# யாருக்காக உழைக்கின்றீர்கள்?

**அ**ன்புடையீர் வணக்கம்!

உழைப்பு மனிதனை உன்னத நிலைக்கு அழைத்துச் செல்லும்.

உழைப்பு இரு வகைப்படும் ஒன்று கடின உழைப்பு! இன்னொன்று புத்திசாலித்தனமான உழைப்பு! ஆங்கிலத்தில் Hard work, Smart work என்று சொல்வார்கள்.

எத்தகைய உழைப்பாக இருந்தாலும் அது பிறருக்கு பயன்படுவது போல தனக்கும் பயன்பட வேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் வர வேண்டும்.தன்னை வருத்தி நேரம் காலம் பார்க்காமல் உழைத்து தான் தேய்ந்து உடல் நொந்து மற்றவரை வாழ வைப்பதால் அந்த உழைப்பின் பலன் முழுமையாகாது. ஓடி ஓடி உழைத்து அதனால் உடல் களைத்து ,பின் இளைத்து, நோய்க்கு தள்ளும் என்று சொன்னால் அப்படிப்பட்ட உழைப்பு யாருக்காக என்கிற கேள்வி இயல்பாகவே எழுகிறது அல்லவா?

பிறந்தவுடன் பெற்றோர்கள் பராமரிப்பில் வளரும் நாம் வளர்ந்து ஆளானவுடன் பெற்றோரை பாதுகாக்க வேண்டும் . அதற்காக உழைக்க வேண்டும் கூடப்பிறந்த அக்கா தங்கைகளுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும்.

தம்பிக்கு கல்லூரியில் அவன் விரும்புகிற கல்லூரியில் அவன் விரும்புகிற பிரிவில் சேர்க்க வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும்.


ஆண் பிள்ளை என்றால் அவனுக்கு கல்லூரி வரை படிக்க வைக்க ஓடி ஓடி உழைக்க வேண்டும். பெண் பிள்ளையாக இருந்தால் ஒரு குறிப்பிட்ட காலம் வரை படிக்க வைத்து மேலே படிப்பை நிறுத்திவிட்டு திருமணம் செய்து வைக்கிறோம்.

அந்தப் படிப்பால் அந்தப் பெண்ணுக்கும் பலன் இருக்காது. மகனுக்கோ மகளுக்கோ திருமணம் செய்து வைக்கத் தேவையான பணத்தை சேர்க்க ஓடி ஓடி உழைக்க வேண்டும்.

மகள் திருமணம் செய்து அவள் கணவன் வீட்டுக்குப் போன பிறகு வளைகாப்பு செய்ய வேண்டும் .மகளுக்கு பிரசவம் பார்க்க மருத்துவமனையில் சேர்க்க வேண்டும். அக்கா, தங்கைகளுக்கு பிறக்கும் குழந்தையைதாய் மாமன் என்ற முறையில் காது குத்த வேண்டும் .அதற்காக சீர் செய்ய வேண்டும் .

இப்படி பிறருக்கு உழைத்து உழைத்து வயது முதிர்ந்த நிலையில் திருமணம் செய்து கொண்டு மீண்டும் Repeat....அப்புறம் வயதான காலத்தில் உடல் நலிவுற்ற நேரத்தில் தன்னை யாரும் காப்பாற்றவில்லை என்று புலம்புவதில் அர்த்தமில்லை. ஒவ்வொருவரும் தன் உடலை தாங்களே பராமரித்துக் கொள்ள வேண்டும். உழைக்கும் போதே ஓய்வெடுக்க வேண்டும் சரியான அளவில் சரியான நேரத்தில் உண்ண வேண்டும். தன்னையும் பாதுகாத்து பிறருக்காக உழைக்க வேண்டும். இளம் வயதிலேயே இறப்புகள் என்பது சர்வசாதாரணமாகிவிட்டது.

குறிப்பாக இளம் வயதிலேயே மாரடைப்பு ஏற்படும் பிரச்சனை கவலைக்குரிய ஒன்றாக மாறி வருகிறது.பொதுவாக மாரடைப்பு என்பது வயதானவர்களுக்கு வரக் கூடிய பிரச்சனை என்ற கண்ணோட்டம் நிலவினாலும், 50 வயதுக்கு உட்பட்ட நபர்களுக்கு இப்போதெல்லாம் மாரடைப்பு அதிகரித்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



உடல் எடை கூடுதல், கொழுப்பு, ரத்தத்திலுள்ள இன்சுலின் அளவு என்று பலவும் இதனால் மாறுபடுவதால் உடல் ஆரோக்கியம் பாதிப்பதாக ஆய்வு தெரிவிக்கிறது. மேலும் "இந்த ஆய்வின் படி, ஆண்கள் காலை 7 மணிக்கும் பெண்கள் 7:15 மணிக்கும் நாளின் முதல் உணவை எடுத்துக் கொள்வது, குறைந்த வயதில் இறப்பதற்கான வாய்ப்பு

"விகிதத்தைக் குறைக்கிறது," என்று சொன்னால் வாய்ப்பில்ல ராஜா நாங்க எழுந்துகிறது காலையில 9 மணிக்கு தான் என்கிறார்கள். குறைந்தபட்சம் 10 மணிக்குள் காலை சிற்றுண்டி முடித்து விட வேண்டும் ஆனால் பல பேர் காலைச் சிற்றுண்டி தவிர்த்து மதிய உணவை சாப்பிடுகிறோம் என்று சொல்கிறார்கள் இது எப்படி உடலை பாதிக்கும் என்றால் முதல் நாள் இரவு 10 மணிக்கு சாப்பிட்டு மறுநாள் மதியம் 12 மணி வரை இடைப்பட்ட காலம் செரிமான கோளாறு ஏற்படுவதாக சொல்லுகிறார்கள்.

இதய நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் சொக்கலிங்கம் பல்வேறு கூட்டங்களில் பேசும்போது, "டே ஷிஃப்ட், நைட் ஷிஃப்ட்... எனப் பணம் சம்பாதிப்பதற்காக நேரம் பார்க்காமல் வேலை பார்க்கிறார்கள்; பணத்தின் பின்னாலேயே ஓடுகிறார்கள்; மாதம் நான்கு முதல் ஐந்து லட்ச ரூபாய் வரை சம்பளம் வாங்குகிறார்கள்; நீச்சல் குளத்துடன் கூடிய வீடு கட்டிக்கொள்கிறார்கள். படிப்பது, பணம் சம்பாதிப்பது இவையெல்லாமே மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வதற்குத்தான்.

பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காகக் கால நேரம் பார்க்காமல் வேலை பார்ப்பது எப்படிச் சரியாகும்? அப்படி வேலை பார்ப்பவர் அமைதியை இழந்துவிடுகிறார்.

அந்த மனிதன் அமைதியை இழக்கும்போது, பல பிரச்னைகள் வந்து சேர்கின்றன. அதனால், 27 வயது, 30 வயதிலேயே, மூளைச் சோர்வு ஏற்பட்டு ஹார்ட் அட்டாக், பிரெய்ன் ஸ்ட்ரோக் போன்றவையெல்லாம் ஏற்பட்டு சிகிச்சைக்காகவருபவர்களைப்பார்க்கிறேன்.

ஏன், இந்த ஓட்டம்... எதை நோக்கி இந்த ஓட்டம்? கவிஞர் அப்துல் ரகுமானின் வரிகளில் சொல்வதென்றால், 'இவர்கள் தன்னை விற்றுவிட்டு எதை வாங்கப் போகிறார்கள்?' என்பதைத்தான் சொல்ல வேண்டும்.", என்று தவறாமல் ஒவ்வொரு மேடைகளிலும் சொல்லி வருகிறார். அதை அனைவரும் சிந்தனையில் நிறுத்த வேண்டும்.

– எம்.எஸ்.மூர்த்தி


# உள்ளே...



ஒரே பதிவில் அனைத்து போக்குவரத்து பயணம்! சென்னையில் அறிமுகம் — 7


ஒரு லட்ச ரூபாயை நெருங்கும் ஒரு சவரன் விலை: தங்கத்தில் முதலீடு செய்யலாமா? — 11


வெளிநாட்டில் வேள்பாரி நாடகம்! — 16


கோபம் வந்தால் பாதிக்கப்படும் உடல் நிலை! — 25


வான் மேகங்களை பற்றி தெரியாத செய்திகள்! — 40


வள்ளுவர் சொன்ன அன்னதானம்! — 46

# 1972 அக்டோபரில் எம்.ஜி.ஆர். தொடங்கிய 53 வருட கட்சி!

## 2017-ல் ஜெயலலிதா மறைவுக்குப் பின் அ.தி.மு.கவில் அடிக்கடி தலையிடும் பா.ஜ.க.!

1952 முதல் தி.மு.க.வில் 20 ஆண்டுகாலம் அரசியலில் ஈடுபட்டு, தமிழக அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக விளங்கிய எம்.ஜி.ஆர் .எந்த கலைஞரை முதலமைச்சராக ஆக்குவதற்கு காரணமாக இருந்தாரோ அந்த கலைஞரை எதிர்த்து தி.மு.கவில் இருந்து விலகினார். பின்னர் 1972 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ஆம் தேதி அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் என்ற கட்சியை துவக்கினார். அரசியல் நெருக்கடி காரணமாக அந்தப் பெயரை அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் என்று பின்னர் மாற்றிக் கொண்டார்.

அ.இ.அ.தி.மு.க. என்று தன்னுடைய கட்சியை அழைக்க வேண்டும் என்று சொன்னார் ஆனால் இன்று வரை பேச்சுவார்த்தையிலும் பத்திரிக்கை ஊடகங்கள் எல்லாவற்றிலும் அ.தி.மு.க என்றே குறிப்பிடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

1972 இல் தொடங்கி அவர் இறக்கும் 1988 வரை தொடர்ந்து அவர் தான் முதலமைச்சராக இருந்தார். அதன் மூலம் அதிமுகவை தமிழக அரசியலில் தனிப்பெரும் சக்தியாக மாற்றி விட்டு சென்றார்.

எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பிறகு அவரது மனைவி வி.என்.ஜானகி அவர்களுக்கும், அதுவரையில் கட்சியில் கொள்கை பரப்பு செயலாளர் ஆகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும், சத்துணவு திட்டத்தை தமிழக முழுவதும் சென்று ஆய்வு செய்து வந்த வருமான ,செல்வி ஜெயலலிதா ஆகிய இருவருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டு இறுதியில் ஜெயலலிதா கட்சிக்கு முழு பொறுப்பு ஏற்கும் நிலை ஏற்பட்டது அரசியலில் விட்டு ஒதுங்கிக் கொண்டார் வி .என். ஜானகி.

1991ம் முதலமைச்சராக பொறுப்பேற்ற செல்வி ஜெயலலிதா 2017 வரை தமிழக அரசியலில் சக்தி வாய்ந்த பெண் தலைவராக தமிழகத்தில் மட்டுமல்ல அகில இந்திய அளவிலும் தவிர்க்க முடியாத சக்தியாக இருந்தார். பிரதமர்களாக இருந்த நரசிம்மராவ், வாஜ்பாய் ஆகியோருடன் சமகால அரசியல் செய்தவர். எல்லா கட்சிகளும் அவரைத் தேடிச் சென்று தேர்தலில் போட்டியிட இடங்களைக் கேட்டுப் பெற்றதும் அது அவர் கொடுக்கின்ற எந்த இடமாக, எத்தனை இடமாக இருந்தாலும்





அதற்கு மறுப்பு பேசாமல், எதிர்த்து சொல்லாமல் அமைதியாக எல்லா அரசியல் கட்சிகளும் திரும்பி வந்து விடுவார்கள். 2014 இல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் இந்தியாவை ஆளப்போவது குஜராத் மோடியா? இந்த லேடியா ?என்று கேட்டு பிரச்சாரம் செய்து அகில இந்திய அரசியல்வாதிகளை தமிழகத்தை பார்த்து வியந்து போக வைத்தவர் ஜெயலலிதா.

அந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு 37/39 இடங்களை வென்றார்.

2016 சட்டமன்றத் தேர்தலில் குறிப்பிடத்தக்க பெரிய கட்சி கூட்டணி இல்லாமல் 227 தொகுதியில் போட்டியிட்டு 134 தொகுதியை பெற்று முதலமைச்சராக தொடர்ந்தார் அவர் 2017 இல் அப்போலோ மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு பலமாய் இந்த ஆளுங்கட்சியாக தமிழகத்திலும், 50 நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்களை கொண்ட இந்திய அளவில் மூன்றாவது கட்சியாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. அவரது மறைவுக்குப் பின் இன்றைய தேதியில் அ.தி.மு.கவின் வாக்கு சதவீதம் குறைந்திருக்கிறது அதற்கு காரணம் அந்த கட்சியில் இருந்து முக்கிய பிரமுகர்கள் ஒவ்வொருவராக வெளியே வந்து தலைமைக்கு எதிராக போர்க்கொடி தூக்குவது தான். இது வெளிப்படையாக தெரிந்தாலும் அப்படி வெளியே போர்க்கொடி தூக்குபவர்களுக்கு பின்னால் பா.ஜ.க இருக்கிறது என்பதை அவர்களே பின்னாளில் பொதுமக்கள் மத்தியில் தெரிவித்ததையும் அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டி அதிமுக உள்கட்சிவகாரங்களில் பாஜக தலையிட்டது என்பதை நிரூபிக்கிறது என்கிறார்கள். அதற்கு ஆதாரமாக அவர்கள் சொல்வது,

ஒரு முதல்வர் மறைந்தால் பொதுவாக அவர் சார்ந்த கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் அடுத்த முதல்வரை தேர்ந்தெடுப்பார்கள். ஆனால் ஜெயலலிதா மறைந்த பிறகு டெல்லியில் இருந்து வெங்கையா நாயுடு வந்து ஓ பன்னீர் செல்வத்தை வைத்து பதவி ஏற்க வைக்கிறார். அப்போது பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி சசிகலா சட்டமன்ற உறுப்பினர்களால் பெரும்பான்மையாக தேர்ந்தெடுக்கப்பட்டு முதல்வராக தன்னை பதவி ஏற்க அழைக்கும்படி கவர்னருக்கு கடிதம் கொடுக்கிறார். இப்படி முன்கூட்டியே நடக்கும் என்று தெரிந்ததால் பா.ஜ.கவின் அங்கமான துக்ளக் ஆசிரியர் குருமூர்த்தி ஓ.பி.எஸ்ஐ அழைத்து, சசிகலாவுக்கு எதிராக போராட்டம்

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 12 அக்டோபர் 2025 டைம்ஸ்- 4



தலைவர் / நிர்வாக இயக்குனர்
**எம்.எஸ். மூர்த்தி**

துணை தலைவர் /இணை இயக்குனர்
**திருமதி சுஜாதா மூர்த்தி**

நிர்வாக சிறப்பு ஆலோசகர்
கலைமாமணி **நடிகர் பூ.விலங்கு மோகன்**

தலைமை செய்தி ஆசிரியர்
**மணவூர்.கி.விடாரண்யம்**

தலைமை நிர்வாக ஆசிரியர்கள்
DR. **ஆ.தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
**எஸ்.ரங்கராஜு**
**ஆர்.சையது சித்திக்**

நிர்வாக ஆசிரியர்
**ஆர்.குணசேகரன்**

செய்தியாளர்கள்
**பி.வினோத், வெ.சுரேஷ்**

செய்தி இணை ஆசிரியர்கள்
**துடுப்பதி ரகுநாதன்**
**கவிஞர் பண்ருட்டி சுகந்தீனா**
**கோவை.பி.முத்துராஜ்**
**சென்னை எம்.ஜி.ரவீந்திரன்**

இணையதள செய்தியாளர்
**ஆர்.கோபிநாத்**

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.எம்.பில்

வடிவமைப்பு
vidapublications@gmail.com

விளம்பரம் சந்தா தொடர்புக்கு
**சி.இளவரசி** - 044 23743007 /08



**அலுவலகம்:**
001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.
தொடர்பு: 044-2374 4661, 23743 007/8
6374285644
mitratimes2015@gmail.com
www.mitratimes.com




நடத்துங்கள் போய் தர்மயுத்தம் என்று சொல்லி ஜெயலலிதா சமாதியில் போய் உட்காருங்கள் என்று சொன்னவுடன் அதை ஓ.பி.எஸ் செய்து முடித்தார் இதை குருமூர்த்தியே துக்ளக் விழாவில் சொல்லி இருக்கிறார். கவர்னர் பதவியேற்க சசிகலாவை அழைக்காத சூழலில் அவரை குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. சிறைக்கு செல்லும் முன்பாக எம்.எல்.ஏக்களை ஒருங்கிணைத்து எடப்பாடி முதலமைச்சர் ஆக்கிவிட்டு டிடிவி தினகரன் துணை பொது செயலாளர் ஆக்கிவிட்டு சிறை செல்கிறார் சசிகலா. சசிகலா சிறையில் இருந்து வருவதற்குள் ஆர்கே நகர் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற டி டி வி தினகரன் இரட்டை இலைக்கு லஞ்சம் கொடுக்க முயன்றார் என்ற வழக்கில் சிறைக்கு செல்கிறார். அப்போது பிரிந்து சென்ற ஓ.பி.எஸ்ஐ எடப்பாடி பழனிச்சாமியோடு இணைத்து வைத்து பாஜக அந்த ஆட்சியை தொடர வைத்தது. இதை பதவி ஏற்பு விழாவில் கவர்னர் அவர்கள் இருவர் கையையும் ஒருவர் மேல் ஒருவர் வைத்து அழுத்தியதை பார்த்த போதே புரிந்து விட்டது. ஆனாலும் ஓபிஎஸ் பின்னாளில் ஒரு பொதுக்கூட்டத்தில் பிரதமர் சொல்லித் தான் அந்த கட்சியில் மீண்டும் சேர்ந்தேன். அவர் சொல்லித்தான் நான் துணை முதல்வராக பொறுப்பேற்றேன் என்று அறிவித்தது குறிப்பிடத்தக்கது.



சிறையில் இருந்து திரும்பிய சசிகலா தினகரன் ஆகியோர் பா.ஜ.கவுக்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் அரசியலில் தொடர்வது குறிப்பிடத்தக்கது. தற்போது செங்கோட்டையன் டெல்லிக்கு முதலில் சென்று வந்தபோது எடப்பாடி டெல்லிக்கு செல்ல அதிமுக __பாஜக கூட்டணிக்கு ஒப்புக்கொள்ள, செங்கோட்டையனை அமைதியாக இருக்கச் சொல்லி உத்தரவு வந்து விட்டது. கூட்டணியில் பிளவை ஏற்படுத்துவது போல எடப்பாடி பயணங்கள் தொடர்வதால் மீண்டும் செங்கோட்டையன் டெல்லிக்கு அழைக்கப்படுகிறார். அவர் வந்தவுடன் மீண்டும் எடப்பாடி டெல்லி செல்கிறார். இப்படி மாறி மாறி அ.தி.மு.கவின் நிலைப்பாட்டை டெல்லி அறிவிக்கும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது. ஒரு காலத்தில் அந்த கட்சியின் ஆளுமை ஜெயலலிதாவை பார்க்க டெல்லியில் இருந்து தலைவர்கள் வந்து காத்திருந்தது போக இப்போது இவர்கள் மாறி மாறி படையெடுப்பது தான் அ.தி.மு.கவின் உள் விவகாரங்களில் பா.ஜ.க தலையிடுகிறது என்பதை வெளிப்படையாக தமிழக மக்கள் புரிந்து கொண்டார்கள். தேர்தலுக்கு இன்னும் 8 மாதம் இருக்கும் சூழலில் இன்னும் என்னென்ன நடக்கப் போகிறதோ என்பதை பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும்.

**- தம்பி முருகானந்தம்**

# ஒரே பதிவில் அனைத்து போக்குவரத்து பயணம்!

## சென்னையில் அறிமுகம்



இந்தியாவிலேயே முதன் முறையாக அனைத்து பொது போக்குவரத்தையும் இணைக்கும் வகையில் ஐ.ஓ.எஸ். மற்றும் ஆண்ட்ராய்டு தளங்களில் செயல்படக்கூடிய 'சென்னை ஒன் மொபைல் செயலியை' முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்த செயலி பஸ், புறநகர் ரெயில், மெட்ரோ ரெயில் மற்றும் கேப், ஆட்டோக்களை ஒரே கியூஆர் கோடு பயணச்சீட்டு மூலம் ஒருங்கிணைக்கிறது.

இதன் மூலம் பொதுமக்கள் பஸ்கள், மெட்ரோ மற்றும் புறநகர் ரெயில்களின் நிகழ்நேர இயக்கத்தை அறிந்து கொள்ளவும். யூபிஐ அல்லது கட்டண அட்டைகள் வழியாக பயணச் சீட்டுகளை பெற்றிடவும். ஒரே பயணப் பதிவின் மூலம் அனைத்து போக்குவரத்து முறைகளிலும் பயணம் செய்யவும் முடியும்.

இச்செயலி ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம் என பல மொழிகளில் மக்கள் பயன்படுத்திடும் வகையில் உருவாக்கப்பட்டு உள்ளது.

'சென்னை ஒன் செயலி' பொது போக்குவரத்து சேவையில் ஒரு முக்கியமான முன்னெடுப்பாகும். இனி பொதுமக்கள் பயணச் சீட்டு பெற வரிசையில் காத்திருக்க தேவையில்லை. இந்த செயலி மூலம் எளிதாக கட்டணம் செலுத்தி பயணச்சீட்டை பெற்று பயணம் செய்யலாம்.

சென்னைப் பெருநகரப் பகுதிக்கான (5.904 சதுர கி.மீ.) விரிவான போக்குவரத்து திட்டம் 2023-2048. 'மக்களும் பொருட்களும் தங்கு தடையின்றி ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதை உறுதி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த, நிலையான, பாதுகாப்பான மற்றும் நெகிழ்வான போக்குவரத்து சுற்றுச்சூழல் அமைப்பை ஏற்படுத்துதல்' என்ற தொலைநோக்குப் பார்வையுடன், நகர்ப்புற போக்குவரத்து முயற்சிகளை முன்னெடுத்து செல்லும் வகையில் இந்த புதிய செயலி அமைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# உருவாகிறதா இன்னொரு சென்னை!



சென்னை அருகே 2,000 ஏக்கர் பரப்பளவில் ஒரு புதிய ஒருங்கிணைந்த நகரத்தை உருவாக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. 'குளோபல் சிட்டி' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தத் திட்டம், உலகத் தரத்திலான வசதிகளை பொதுமக்களுக்கு வழங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் (TIDCO) இந்த திட்டத்தை செயல்படுத்தும். வரும் நிதியாண்டில் இதற்கான பணிகள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்னைக்கு அருகில் சுமார் 2,000 ஏக்கர் பரப்பளவில் ஒரு புதிய நகரத்தை உருவாக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (Tidco) நான்கு இடங்களை அடையாளம் கண்டுள்ளது. இந்த இடங்களின் பட்டியல் தற்போது மாநில அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள், ஃபின்டெக் மண்டலங்கள் மற்றும் நவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் நன்கு கட்டமைக்கப்பட்ட ஒரு நகரத்தை உருவாக்குவதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும், சிறந்த போக்குவரத்து மற்றும் இணைப்பு வசதிகளையும் உறுதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நிதிநிலை அறிக்கைக்கு பதில் அளித்து பேசிய போது சென்னை, கோவை, திருப்பூர், திருச்சி மற்றும் மதுரை போன்ற நகரங்களுக்கு பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து வருவதால், மாநிலத்தில் நகரமயமாக்கல் விகிதம் அதிகரித்து வருவதாக தெரிவித்தார்.

நகரங்களை சீரற்ற முறையில் விரிவுபடுத்துவதை விட, ஒருங்கிணைந்த புதிய நகரங்களை உருவாக்குவது பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய மிகவும் பயனுள்ள அணுகுமுறையாக இருக்கும் என நகர திட்டமிடல் வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார். இதை கருத்தில் கொண்டு, முதல் கட்டமாக, சென்னை அருகே இந்த புதிய நகரம் உருவாக்கப்படும்.

இந்த புதிய நகரம் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள், ஃபின்டெக் வர்த்தக மண்டலங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள், வங்கி மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள், ஷாப்பிங் வளாகங்கள், வர்த்தக மையங்கள் மற்றும் மாநாட்டு அரங்குகள் போன்ற பல்வேறு நவீன வசதிகளை கொண்டிருக்கும்.

## அதிபர் டிரம்ப் அதிரடி உத்தரவு:

# இந்தியர்களுக்கு நெருக்கடி வருமா!

அமெரிக்காவில் வெளிநாட்டினர் பணிபுரிவதற்காக வழங்கப்படும் எச்1பி விசாக்களுக்கான கட்டணத்தை 1 லட்சம் டாலராக ( இந்திய மதிப்பில் ரூ.88 லட்சம் ) உயர்த்தும் உத்தரவில் அதிபர் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார். இது என்ன மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது விவாதப் பொருளாகியுள்ளது. இது இந்தியாவுக்கு நெருக்கடி என்றும், இல்லை இந்தியர்கள் திறமை இனி இந்தியாவுக்கு முழுமையாக பயன்படும் என்றும் வாதங்கள் வைக்கப்படுகின்றன.

அதிகப்படியான வரி விதிப்பால் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பொருளாதார ரீதியாக சிக்கல் எழுந்துள்ள நிலையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் போட்ட உத்தரவால் அங்கு வேலை செய்யும் இந்தியர்களுக்கு நெருக்கடி வந்துள்ளதாக சொல்லப்படுகிறது.

2020 முதல் 2023 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட எச்1பி விசாக்களில் 71 சதவீதம் அளவுக்கு இந்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்கா வழங்கும் எச்1பி விசாக்களில் 5ல் ஒரு பங்கை இந்தியாவை சேர்ந்த தொழில்நுட்ப நிறுவனங்கள் கைப்பற்றுகின்றன. முன்னதாக எச்1பி விசாக்களுக்கான கட்டணம் ரூ.1.32 லட்சமாக இருந்த நிலையில், அது இப்போது ரூ.88 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒரு வெள்ளிக்கிழமை உத்தரவு போட்டு அதைப்பற்றி எந்த விவாதமும் இல்லாமல் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் என்று அதிரடியாக அறிவித்தார்.

1 லட்சம் டாலர் எச்1 பி விசா கட்டணம் என்பதால் அமெரிக்க நிறுவனங்களும் இனி அமெரிக்க பட்டதாரிகளை அதிகமாக பணியில் அமர்த்த முன்வரும் என்று அமெரிக்கர்கள் நம்புகின்றனர்.

அமெரிக்கர்களால் இந்த வேலையைப் பார்க்க முடியாது என்ற நிலையில் இருக்கும் பணிகளுக்கு மட்டுமே வெளிநாட்டவரை பணியமர்த்தினால் போதுமென்பது ட்ரம்ப்பின் பார்வையாக இருக்கிறது. இது இந்தியாவுக்கு நெருக்கடியாக இருக்கும் என்ற பார்வை ஒருபுறம் இருக்க இந்த நகர்வால் இந்தியாவுக்கு ஒரு வகையில் லாபம் தான். இங்கே உள்ள திறமைசாலிகள், டெக் ஆளுமைகள் இங்கேயே முழுமையாக பயன்படுத்தப்படுவார்கள் என்ற பார்வையும் முன்வைக்கப்படுகிறது.

எதிர் விளைவுகளைப் பற்றி எப்போதுமே கவலைப்படாத அதிபர் ரெனால்ட் ட்ரம்ப் உத்தரவுகளை பிறப்பிப்பதும் அந்த உத்தரவுகளை உடனடியாக அன்றே அமலுக்கு வருவது தொடர்ந்து நடந்து வருகிறது ஏற்கனவே




வரிவிதிப்பால் இந்தியா நட்புறவு பாதிக்கும் என்ற சூழல் வந்த போது அப்படி எல்லாம் இல்லை என்பதை தெரிவிக்கும் விதமாக டிரம்ப் செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மருடன் இணைந்து செய்தியாளர் சந்திப்பில் பேசிய டிரம்ப், "நான் இந்தியாவுடன் மிகவும் நெருக்கமாக இருக்கிறேன். நான் இந்தியப் பிரதமருடன் மிகவும் நெருக்கமாக இருக்கிறேன். எங்களுக்குள் மிகச் சிறந்த உறவு உள்ளது" என்று கூறினார்.

சமீபத்தில் தனது 75வது பிறந்தநாளைக் கொண்டாடிய பிரதமர் மோடிக்கு வாழ்த்து தெரிவித்ததாகவும், அதற்கு நன்றி தெரிவித்து மோடி ஒரு அழகான அறிக்கை வெளியிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.இருநாட்டு தலைவர்களிடையே தனிப்பட்ட முறையில் உறவுகள் நல்ல முறையில் இருந்தாலும், ஒரு நாட்டின் உத்தரவு இன்னொரு நாட்டின் மக்களை பாதிக்கும் என்பதை நினைக்கும்போது கவலையாக இருக்கிறது. இந்த உத்தரவுக்கு எதிராக அமெரிக்காவில் பெரும் எதிர்ப்பு இருப்பதால் மாற்றம் வரக்கூடும் என்று நம்பப்படுகிறது. குறிப்பாக இந்த உத்தரவால் அமெரிக்காவுக்கு வந்து படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தும், வெளிநாட்டு நிறுவனங்களின் பணிகளுக்கு அமெரிக்காவில் இருந்து பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை குறைந்தால் பொருளாதார ரீதியாக பாதிப்பு ஏற்படும் என்றும் எச்சரிக்கிறார்கள்.

என்ன நடக்கப் போகிறது என்பதை அச்சத்தோடு எதிர் நோக்குகிறார்கள் அமெரிக்காவில் உள்ள இந்திய உறவுகள்.

– முத்துராஜ் பொள்ளாச்சி



# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு அரசின் சார்பில் ஆன்மீக சுற்றுலா!

இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட பக்தர்கள் கட்டணமில்லா பயணமாக ஆடி மாதத்தில் அம்மன் கோவில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவத் கோவில்களுக்கும், அறுபடை வீடுகளுக்கும், ராமேசுவரத்திலிருந்து காசிக்கும் அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர். மேலும் மானசரோவர் மற்றும் முக்திநாத் போன்ற புனித தலங்களுக்கு ஆன்மீக பயணம் சென்று வருபவர்களுக்கு வழங்கப்படும் அரசு மானியமும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆன்மிகப் பயணங்களின் மூலம் இதுவரை 7,998 பக்தர்கள் பயன் பெற்றுள்ளனர்.

அந்தவகையில் ராமேசுவரம் ராமநாதசாமி கோவிலிலிருந்து காசி விஸ்வநாதசாமி கோவிலுக்கு இவ்வாண்டு ரூ.1.50 கோடி அரசு நிதியில் 600 பக்தர்கள் ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லப்பட உள்ளனர். இதற்காக இந்து சமய அறநிலையத்துறையின் 20 இணை ஆணையர் மண்டலங்களிலிருந்து மண்டலத்திற்கு 30 பக்தர்கள் வீதம் 600 நபர்களை தேர்வு செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.







இந்த ஆன்மீக பயணத்திற்கான விண்ணப்ப படிவங்களை அந்தந்த மண்டல இணை ஆணையர் அலுவலகங்களில் நேரில் பெற்றோ அல்லது www.hrce.tn.gov.in என்ற இந்து சமய அறநிலையத்துறை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தோ விண்ணப்பிக்கலாம்.

# ஒரு லட்ச ரூபாயை நெருங்கும் ஒரு சவரன் விலை: தங்கத்தில் முதலீடு செய்யலாமா?

2025 ஜனவரி 1ம் தேதி, 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.7,150 ஆகவும், பவுனுக்கு ரூ.57,200 ஆகவும் விற்பனை ஆன நிலையில், இன்றைய நிலையில் 22 காரட் ஆபரணத் தங்கம் ஒரு கிராம் ரூ.10,240க்கும், ஒரு பவுன் ரூ. 81,920க்கும் விற்பனை செய்யப்படுகிறது. தங்கத்தை போலவே வெள்ளியின் விலையும் உயர்ந்துள்ளது. கிராமுக்கு ரூ.2 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.142க்கும், ஒரு கிலோ பார் வெள்ளி ரூ.1,42,000க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை அதிகமாக நுகரும் / கையிருப்பில் வைத்திருக்கும் நாடுகளில் சீனா, அமெரிக்கா, ஜெர்மனி, இத்தாலியை தொடர்ந்து இந்தியா 5வது இடத்தில் இருக்கிறது. ஏழை, நடுத்தர மக்களின் அவசரத் தேவைக்கு ஆபத்பாந்தவன் என்பதால் அவரவர் வாங்கும் சக்திக்கு ஏற்ப தங்கம் வாங்கிக் கொள்வது இந்தியர்களின் சேமிப்புப் பழக்கத்தில் முதன்மையாக உள்ளது.

“இப்போதைய சர்வதேச சூழலை வைத்துப் பார்த்தால், இந்த டிசம்பர் இறுதிக்குள் தங்கம் விலை ஒரு பவுன் ரூ.1 லட்சம் வரை எட்டக் கூடும். வெள்ளி விலையும் ஒரு கிராம் ரூ.250 வரை அதிகரிக்கும்.”

விலையுயர்ந்த நிலையில் தங்கத்தின் மீது முதலீடு செய்யலாமா? என்று பொருளாதார வல்லுநர்கள் கருத்து சொல்லும் போது“தங்கம் மீது நிச்சயமாக முதலீடு செய்யலாம். தங்கம் பாதுகாப்பான முதலீடு என்பதும் அதன் விலை அதிகரிக்க ஒரு காரணம். அதனால் அவரவர் வசதிக்கு ஏற்ப தங்கத்தின் மீது முதலீடு செய்வது எதிர்காலத்தில் லாபகரமானதாகவே இருக்கும்.

வெள்ளியிலும் தாராளமாக முதலீடு செய்யலாம். ஆபரணம், அலங்கார, பூஜை பொருட்களைத் தாண்டி தொழிற்சாலைகளிலும் வெள்ளி பயன்படுத்தப்படுகிறது. அதனால் வசதிக்கேற்ப வெள்ளியிலும் முதலீடு செய்யலாம். தங்கத்தைப் போல் வெள்ளி இடிஎஃப் இருக்கிறது. அதில் கூட மக்கள் முதலீடு செய்யலாம்.”



# சொத்து வாங்கினா போதுமா பட்டா வாங்க வேண்டாமா?

**சொத்**து வாங்கியவுடன் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்தவுடன் வேலை முடிந்துவிட்டது என்று நினைக்கக் கூடாது. பத்திரம் தான் நம் கைக்கு கிடைத்துவிட்டதே இனி சொத்து நமக்குத்தான் சொந்தம் என்று நினைத்துவிடக்கூடாது. பட்டா வாங்குவது மிக அவசியம். அதிலும் ஒருவரிடம் இருந்து சொத்து முழுவதையும் வாங்காமல் ஒரு பகுதியை மட்டும் வாங்கி இருந்தால் உடனே பட்டா பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துவிட வேண்டும்.

ஏனெனில் அவர் சொத்தின் ஒரு பகுதியை மட்டும் விற்பனை செய்து இருப்பதால், பட்டா அவர் பெயரில்தான் இருக்கும். நாம் வாங்கிய பகுதிக்கு தனியே பட்டா பெற வேண்டும். அதற்கு உட்பிரிவு பட்டா என்று பெயர். இந்த பட்டாவை உடனே பெறுவது நல்லது. ஏனெனில் பட்டாவுக்கு விண்ணப்பிக்காமல் இருந்துவிட்டால் நீங்கள் வாங்கிய பகுதிக்கும் சேர்த்து உரிமையாளர் பெயரிலேயே தொடர்ந்து பட்டா இருக்கும் என்பதால், சில பிரச்சினைகளை சந்திக்க நேரலாம்.



முக்கியமாக நீண்ட நாட்களாக பட்டா பெறாமல் இருந்தால், அவர் தன்னுடைய பட்டா மூலம் நீங்கள் வாங்கிய இடத்துக்கும் உரிமை கொண்டாட நேரிடலாம். அவர் வேறொருவருக்கு சொத்தை விற்பனை செய்வதாக இருந்தாலும், அதன் மூலம் உங்களுக்கு பிரச்சினை வரலாம். அதாவது நீங்கள் உட்பிரிவு பட்டா பெறாமல் இருப்பதால், தன்னுடைய பட்டாவை சொத்து வாங்கும் மற்றவரிடம் காண்பித்து முழு சொத்தும் தனக்குரியது! என்று சொல்லலாம்.

அதன் மூலம் உங்களிடம் சொத்து விற்பனை செய்யப்பட்ட விஷயத்தை மறைக்கலாம். அல்லது நீங்கள் வாங்கியிருக்கும் சொத்தின் பகுதியையும் சேர்த்து மற்றவருக்கு விற்றுவிட முயற்சிக்கலாம். அப்படி விற்பனை நடந்துவிட்டால் சொத்தை வாங்கி இருக்கும் உங்களுக்கு சிக்கல் நேரும். நீங்கள் உட்பிரிவு பட்டா பெறாமல் இருப்பது அவருக்கு சாதகமாக மாறி விடக்கூடும். அதேநேரத்தில் நீங்கள் உட்பிரிவு பட்டாவுக்கு விண்ணப்பித்திருந்தால், அந்த சொத்து இரண்டு பாகமாக பிரிக்கப்பட்டு விடும்.

உதாரணமாக சர்வே எண் 50/1ருல் அடங்கியுள்ள 2 ஏக்கர் நிலத்தில் நீங்கள் ஒரு ஏக்கர் நிலத்தை மட்டும் வாங்கினால், பட்டாவுக்கு விண்ணப்பிக்கும்போது, சர்வே எண் 50/1 இரண்டு பிரிவாக உட்பிரிவு செய்து இரண்டு பட்டாவாக மாற்றப்படும். அதாவது சர்வே எண் 50/1 என்பது 50/1ஏ அடங்கிய ஒரு ஏக்கர் என்றும், 50/1பி அடங்கிய மற்றொரு ஏக்கர் என்றும் பிரிக்கப்பட்டு உரிமையாளருக்கும், நிலத்தை வாங்கிய உங்களுக்கும் தனி தனியாக பட்டா கொடுக்கப்படும்.

இதுதவிர உட்பிரிவு எண், பரப்பு, தீர்வை, வரைபடம் போன்றவை மாறுபடும். புதிய உட்பிரிவு எண் அடங்கிய சர்வே எண் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டும் இருக்கும். அதன் மூலம் அந்த சொத்தில் உங்கள் எல்லைப்பகுதிகள் வரையறை செய்யப்பட்டு இருக்கும். அதனால் உங்கள் சொத்துக் குரிய உரிமை உங்கள் வசம் வந்துவிடும். அதனால் சொத்தின் ஒரு பகுதியை விற்பனை செய்த உரிமையாளர் முழு சொத்துக்கும் உரிமை கொண்டாடுவது தவிர்க்கப்படும்.

அதே நேரத்தில் பாகப்பிரிவினை வாயிலாக வந்த சொத்தை வாங்குவதாக இருந்தால் பட்டா விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். அவர் பெயரில்தான் பட்டா இருக்கிறதா? என்று பார்க்க வேண்டும். அப்படி பட்டா இருந்தால் தான் நீங்கள் எளிதாக உங்கள் பெயருக்கு எளிதாக பெயர் மாற்றம் செய்ய முடியும். அப்படி இல்லாவிட்டால் அதுவும் சிக்கலை ஏற்படுத்தி விடும். பாகப்பிரிவினை செய்த சொத்துக்கு அவர் பட்டா வாங்காமல் இருந்தால் குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் உரிமை கொண்டாடும் விதத்தில் பழைய பட்டா இருக்கும். அதில் இருந்து அவர் தனியாக தன்னுடைய சொத்துக்கு பட்டா பெற்ற பிறகே அந்த சொத்தை வாங்குவதற்கு பரிசீலிக்க வேண்டும். அப்போது தான் சொத்தை கிரயப்பத்திரம் செய்த பிறகு அவர் பெயரில் இருக்கும் பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய சுலபமாக இருக்கும்.

அப்படி அல்லாமல் பாகப்பிரிவினை அடிப்படையில் பட்டா வாங்காமல் இருந்தால் அத்தகைய சொத்தை வாங்குவதை தவிர்ப்பது நல்லது. மேலும் பட்டாவை பிறகு வாங்கிக்கொள்ளலாம் என்று காலம் தாழ்த்தக் கூடாது. சொத்தை விற்பனை செய்தவர் ஒருவேளை இறந்துவிட்டால் அவர் பெயரில் இருக்கும் பட்டாவை உங்கள் பெயருக்கு மாற்றுவது சிக்கலாகி விடும். அவர்களுடைய வாரிசுகளின் உதவியை நாட வேண்டியிருக்கும். அப்படி பெயர் மாற்றம் செய்வதும் சிக்கலான விஷயமாகவே அமையும். எனவே கிரயப்பத்திரம் வாங்கியதும் உடனடியாக உட்பிரிவு பட்டாவுக்கு விண்ணப்பித்து விடுவது நல்லது.



# உடலுக்கு ஆபத்தை விளைவிக்கும் கொலஸ்ட்ரால்

**கொ**லஸ்ட்ரால் என்பது நம் உடலில் உள்ள ஒரு வகை கொழுப்பு ஆகும். இதில் இரு வகை உள்ளது. ஒன்று ஹெச் டி எல் என்னும் நல்ல கொலஸ்ட்ரால். இன்னொன்று எல்டிஎல் என்னும் கெட்ட கொலஸ்ட்ரால். நல்ல கொலஸ்ட்ரால் செல்கள் மற்றும் ஹார்மோன்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால், LDL என்னும் கெட்ட கொழுப்பின் அளவு வரம்பை விட அதிகரிக்கும் போது, மாரடைப்பு அபாயத்தை அதிகரிப்பதோடு, நமது ஆரோக்கியத்திற்கு மிக பெரிய அச்சுறுத்தலாக மாறுகிறது.

கொலஸ்ட்ரால் அல்லது அதிக கொழுப்பு நமது இதயம் மற்றும் இரத்த நாளங்களில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதன் அறிகுறிகள் சரியான நேரத்தில் கண்டறியப்பட்டால், கடுமையான சிக்கல்களைத் தவிர்க்கலாம். உடலில் கொலஸ்ட்ரால் அளவு அதிகரிக்கும் போது தோன்றும் அறிகுறிகள் (Health Tips) பற்றி தெரிந்து கொள்வோம்.

கொலஸ்ட்ரால் அல்லது கொழுப்பின் அதிகரிப்பு காரணமாக, இரத்த நாளங்களில் பிளேக் அல்லது மெழுகு போன்ற பொருள் சேரத் தொடங்குகிறது. இது இரத்த ஓட்டத்தைத் தடுக்கிறது. இது மார்பில் வலி அல்லது பாரத்தை ஏற்படுத்தக்கூடும், குறிப்பாக உடல் செயல்பாடுகளின் போது அதிக வலியை உணரலாம்.

அதிக கொழுப்பு காரணமாக இதயத்திற்கு போதுமான ஆக்ஸிஜன் நிறைந்த இரத்தம் கிடைக்காது. இதனால் சோர்வு மற்றும் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படலாம்.

உடலில் கொலஸ்ட்ரால் அதிகரிக்கும் போது, சருமத்தில், குறிப்பாக கண்கள், முழங்கைகள், முழங்கால்கள் அல்லது குதிகால்களில் மஞ்சள் புள்ளிகள் தோன்றக்கூடும். இது சாந்தோமா என்று அழைக்கப்படுகிறது, மேலும் இது அதிக கொழுப்பின் முக்கிய அறிகுறியாகும்.

கொழுப்பின் அளவு அதிகரிப்பது இரத்த ஓட்டத்தை பாதிக்கிறது. இது கால்களில் வலி, ஜில்லென்ற உணர்வு அல்லது உணர்வின்மையை ஏற்படுத்தும். இது புற தமனி நோயின் அறிகுறியாக இருக்கலாம். அதிக கொழுப்பு இரத்த ஓட்டத்தை பாதித்து, இரத்த அழுத்தத்தை அதிகரிக்க வழிவகுக்கும். இது இதய நோய்க்கு முக்கிய காரணமாக மாறக்கூடும்.

இதை தவிர்ப்பதற்கு பழங்கள், காய்கறிகள், முழு தானியங்கள் மற்றும் ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்த உணவுகள் போன்ற நார்ச்சத்து நிறைந்த உணவுகளை உண்ண வேண்டும்.தினமும் குறைந்தது 30 நிமிட உடல் செயல்பாடு, அதாவது விறுவிறுப்பான நடைபயிற்சி, ஓட்டம் அல்லது யோகா போன்றவை கொழுப்பின் அளவைக் கட்டுப்படுத்த உதவும்.

# லேப்டாப் பேட்டரி பராமரிப்பது எப்படி!

விண்டோஸ் மற்றும் மேகோஸ் (macOS) இயங்குதளங்கள், பேட்டரியை மிச்சப்படுத்துவதற்காகவே வடிவமைக்கப்பட்ட பவர் மோட்களுடன் வருகின்றன. மின்சார இணைப்பு இல்லாதபோது, 'பேட்டரி சேவர்' அல்லது 'எனர்ஜி சேவர்' மோடுகளைப் பயன்படுத்த வல்லுநர்கள் பரிந்துரைக்கின்றனர். இந்த மோட்கள் பின்னணியில் இயங்கும் செயலிகளைக் குறைத்து, ஸ்கிரீன் பிரகாசத்தைக் குறைத்து, அதிக ஆற்றல் தேவைப்படும் வன்பொருள் பயன்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்றன



லேப்டாப்பின் பேட்டரியை அதிகம் பயன்படுத்தும் பாகங்களில் ஒன்று அதன் டிஸ்பிளே. ஆற்றல் திறன் வல்லுநர்களின் கூற்றுப்படி, ஸ்கிரீன் பிரகாசத்தைக் குறைப்பது பேட்டரி ஆயுளை உடனடியாக மேம்படுத்தும். சிறிது நேர பயன்பாடற்ற நிலையில் தானாகவே டிஸ்பிளே மங்கவும், சில நிமிடங்களுக்குப் பிறகு லேப்டாப் ஸ்லீப் மோடில் செல்லவும் அமைப்புகளை மாற்றி வையுங்கள்.*

பல செயலிகள் நீங்கள் அறியாமலேயே பின்னணியில் இயங்கிக் கொண்டிருப்பதால், பேட்டரி ஆற்றல் வீணாகிறது. டாஸ்க் மேனேஜர் (Task Manager) அல்லது ஆக்டிவிட்டி மானிட்டர் (Activity Monitor) போன்ற கருவிகளைப் பயன்படுத்தி, தேவையில்லாத ஸ்டார்ட்அப் புரோகிராம்கள் மற்றும் பின்னணி செயலிகளை அடையாளம் கண்டு முடக்கலாம். இதனால் பேட்டரியின் சுமை குறையும்.*

வயர்லெஸ் இணைப்புகள் பேட்டரியை வேகமாக வெளியேற்றும். நீங்கள் ப்ளூடூத் அல்லது வைஃபையைப் பயன்படுத்தாதபோது, அவற்றை அணைத்து வைப்பது பேட்டரி ஆயுளைக் கணிசமாக நீட்டிக்கும். இந்த சிறிய மாற்றத்தை ஐடி தொழில்நுட்ப வல்லுநர்கள் பெரிதும் பரிந்துரைக்கின்றனர். நவீன லேப்டாப்களில் செயல்திறனைக் கட்டுப்படுத்தும் அமைப்புகள் உள்ளன. 'உயர் செயல்திறன்' (High-performance) மோடுகள் வேகத்தை அதிகரித்தாலும், பேட்டரி ஆயுளைக் குறைக்கும். அதற்குப் பதிலாக, 'பேலன்ஸ்டு' (ஙிணீறீணீஸீநீமீபீ) அல்லது 'பவர் சேவிங்' (றிஷீஷ்மீகூஷீ டணீஸ்வீஸீரீ) மோடுகளைப் பயன்படுத்துங்கள். இந்த மோடுகள் தேவையான அளவு மட்டுமே சிபியு ஆற்றலைப் பயன்படுத்தும்.

பழைய சாப்ட்வேர் மற்றும் டிரைவர்கள் பேட்டரியை திறனற்ற முறையில் பயன்படுத்தக்கூடும். உற்பத்தியாளர்கள் பிழைகளைச் சரிசெய்யவும், ஆற்றல் பயன்பாட்டை மேம்படுத்தவும் அடிக்கடி அப்டேட்களை வெளியிடுவார்கள். உங்கள் சிஸ்டத்தை புதுப்பித்து வைப்பது பேட்டரி செயல்திறனை மேம்படுத்த உதவும். புதிய லேப்டாப்களில் பேட்டரி ஹெல்த் மேனேஜ்மென்ட் கருவிகள் உள்ளன. இவை சார்ஜிங் முறைகளை மாற்றி, பேட்டரியின் ஆயுளை நீட்டிக்கின்றன. இந்த அம்சங்களை இயக்குவதன் மூலம் பேட்டரி அதிகப்படியாக சார்ஜ் ஆவதைத் தடுக்கலாம். யு.எஸ்.பி டிரைவ்கள், வெப்கேம்கள் அல்லது மவுஸ் போன்ற வெளிப்புற சாதனங்கள் பயன்பாட்டில் இல்லாதபோதும் பேட்டரியை வெளியேற்றும். இத்தகைய அவசியமற்ற சாதனங்களை லேப்டாப்பில் இருந்து துண்டித்து வைப்பது பேட்டரி ஆயுளை நீட்டிக்கும்.

விண்டோஸ் மற்றும் மேகோஸ் இரண்டிலும் பேட்டரி பயன்பாட்டு அறிக்கைகளைச் சரிபார்க்கும் வசதி உள்ளது. எந்தெந்த செயலிகள் அதிக பேட்டரியை பயன்படுத்துகின்றன என்பதை இந்த அறிக்கைகள் மூலம் கண்டறியலாம். இதன் மூலம் எந்தெந்த செயலிகளைச் சரிசெய்ய வேண்டும் அல்லது நீக்க வேண்டும் என முடிவு செய்யலாம்.*

பவர் பேங்கை பயன்படுத்துங்கள். மொபைலுக்கு பவர் பேங்க் இருப்பது போல லேப்டாப் இருக்கும் பவர் பேங்க் பயன்படுத்துவது பயணங்களின் போது உபயோகமாக இருக்கும்.

# Too Good To Be True

Beware of mobile apps because they can pose significant security risks, including stealing personal and financial data, accessing your device's microphone and camera, performing unauthorized actions like making expensive calls, or becoming part of a botnet for distributed denial of service (DDoS) attacks. To protect yourself, only download apps from trusted sources like the official Google Play Store or Apple App Store, verify permissions, check app reviews and developer information, keep your operating system and apps updated, and be cautious of suspicious links and "too good to be true" offers.

What are the risks of malicious mobile apps?

Data Theft: Fraudsters can steal sensitive information like payment details, home addresses, and even social security numbers, using it for identity theft or making fraudulent purchases. Device Compromise: Some apps contain malware that can damage your device, install other harmful applications without your consent, or turn your phone into a "bot" for activities like sending spam.

Financial Fraud: Apps can initiate expensive phone calls, send premium SMS messages, or make unauthorized purchases on your phone bill.

Surveillance: Malicious apps can secretly use your microphone and camera to spy on you.

Phishing: Fake apps can trick you into entering your login credentials on their websites, leading to the theft of



your account information.

How to stay safe from malicious apps: Use Official App Stores:

Only download apps from trusted sources, such as the Google Play Store for Android devices or the Apple App Store for iOS devices. Check App Permissions: Pay close attention to the permissions an app requests during installation. If an app asks for access to data or features that don't seem necessary for its function, it could be a red flag.

Research Before Downloading: Look into the developer of the app and read user reviews and ratings. Be skeptical of apps with limited information or a large number of suspiciously positive reviews.

Keep Software Updated: Regularly update your phone's operating system and your apps. Developers release security patches to fix vulnerabilities that scammers exploit. Be Wary of Phishing: Don't click on links in suspicious emails, text messages, or social media posts, as they could lead to malicious apps or phishing websites.



எஸ்.ஜானகி

Use Security Software: Consider installing reputable mobile security software to help detect and block malicious apps and activity on your device. Be Skeptical of "Too Good To Be True" Offers: If an app offers something that seems unrealistic, it's often a sign of a scam.

# வெளிநாட்டில் வேள்பாரி நாடகம்!



**வே**ள்பாரி என்ற புத்தகம் எழுத்தாளர் சு. வெங்கடேசன் அவர்கள் எழுத அதை விகடன் பிரசுரம் வெளியிட்டது அந்த வெளியீட்டு விழாவில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

அந்த வேள்பாரி அமெரிக்காவில் ஒரு மேடை நாடகம் வடிவில் பார்க்கின்ற வாய்ப்பு கிடைத்தது. ஹரிசோனாவில் உள்ள விநாயகர் கோயில் வளாக கட்டிடம் கட்டுவதற்காக பக்தர்கள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகம். Scottsdale என்ற இடத்தில் அமைந்துள்ள scottsdale center for performing arts என்ற அரங்கில் நாடகம் நடைபெற்றது நாடகம் நடைபெற்றது800 பேர் அமரக்கூடிய பிரம்மாண்டமான அரங்கம் .அரங்கம் நிரம்பி வழிந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் எம் பி எழுத்தாளர் சு வெங்கடேசன் எழுதிய வேல் பாரி நாடகத்தில் இருந்தும் புறநானூறு வரலாற்று நூலில் வேண்டும் எடுக்கப்பட்ட தொகுப்பில் இந்த நாடகம் அமைந்தது குறிப்பிடத்தக்கது. இதில் நடித்த சேர சோழ பாண்டிய மன்னர்கள், பரம்பு நாடு வேள்பாரி ,கபிலர் ,ஔவையார் , குடிமக்கள் என்று பிரம்மாண்டமான பாத்திரங்களை ஏற்று நடித்த நடிகர்கள் தத்ரூபமாக நடித்திருந்தனர். நிகழ்ச்சி முடியும் வரையும் அரங்கம் முழுவதும் அமைதியாக இருந்தது.





போர் நடக்கும் காட்சி வரும்போது மட்டும் வெற்றிவேல் வீரவேல் வெற்றிவேல் வீரவேல் என்று மேடையில் முழக்கம் எழுப்பப்பட்ட போது அரங்கில்

ரசிகர்களும் ஓங்கி குரல் எழுப்பியது நெகிழ்ச்சியாக இருந்தது. வெளிநாட்டில் ஒரு தமிழ் நாடகம் இவ்வளவு சிறப்பாக நடைபெற்றது சாதாரணமாக கடந்து போகக் கூடிய விஷயம் அல்ல சனிக்கிழமை மாலை வேலை மதியம் 5.00 வந்திருந்த ரசிகர்கள் நாடகம் 7 மணிக்கு முடிந்து அதை தொடர்ந்து பாராட்டு நிகழ்ச்சிகள் எல்லாம் முடிந்து எட்டு மணி வரை அமைதியாக இருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது



– அமெரிக்காவிலிருந்து செய்தி ஆசிரியர்
கி.விடாரண்யம்

# அடுப்பு ஊதாங்குழல்!

**- ஓவியன் அன்பு**



கிராமங்களில் விறகு அடுப்பில் சமைத்த காலங்களில் இது இல்லாத வீடே இல்லை." இந்த எழவு வீட்டிலே எப்போ வாக்கப்பட்டு வந்தேனோ ஊதாங்குழலை ஊதியே என் பிரானனை முழுதும் போகுது" னு மழைக் காலங்களில் ஈர விறகை பற்றவைக்கும் போது என் அம்மா புலம்புவாங்க. வீடே புகை மண்டலமா இருக்கும். கார்த்திகை மாதங்களில் தொடர்மழையால் இந்த பிரச்னை மேலோங்கி இருக்கும். அதை ஊதுவதும் ஒரு கலையாகும். தொடர்ந்து ஊதி நெருப்பு பற்றியப்பின் தான் நிறுத்துவாங்க. நான் ஊதும்போது புகையால் கண்கள் எரியும்.

இந்த ஊதாங்குழல் அதற்கு மட்டும் பயன்படவில்லை. நான் விளையாட வெளியேப்போய் சாப்பாட்டு நேரத்திற்கு வீட்டிற்கு வராமல் நேரங்கழித்து வந்தால் நேராக அடுப்படிக்குபோய் எட்டி பார்ப்பேன். ஊதாங்குழல் அடுப்பில் நெருப்புக்குள் இருந்தால் வீட்டு பக்கமே ஐயா வரும்வரை வரமாட்டேன். ஊதாங்குழல் பழுத்து தகதகனு இருப்பதை பார்க்கும்போதே பாதி உயிரே போய்விடும். ஒரே ஒருமுறை அம்மா சுட்டதால் கொப்பளத்தோடு கஷ்டபட்டேன் மற்றபடி மிரட்டலோடு நிறுத்திடுவாங்க. மறக்க முடியாத ஊதாங்குழல் இன்று மறைந்துப்போனது.

# நடைப்பயிற்சி தரும் நல்ல பலன்கள்!





நடைப்பயிற்சி மன சமநிலையை சரியாக வைத்திருக்கிறது. நடைபயிற்சி நல்ல தூக்கத்தைப் பெற உதவுகிறது. நடைபயிற்சி சர்க்கரையை கட்டுப்படுத்துகிறது.

நடைபயிற்சி எரிச்சலைக் குறைக்கிறது. நடைபயிற்சி உடல் பருமனைக் கட்டுப்படுத்துகிறது. நடைபயிற்சி நுரையீரலை பலப்படுத்துகிறது.

நடைபயிற்சி இதயம் சரியாக செயல்பட உதவுகிறது. நடைபயிற்சி உணவு செரிமானத்திற்கு உதவுகிறது. நடைபயிற்சி வாயு உருவாவதைத் தடுக்கிறது.

நடைபயிற்சி சோர்வை நீக்குகிறது. நடைபயிற்சி இரத்தத்தை சுத்திகரிக்கிறது. நடைபயிற்சி புத்தியை கூர்மைப்படுத்துகிறது.

நடைபயிற்சி எலும்புகளை பலப்படுத்துகிறது. நடைபயிற்சி தன்னம்பிக்கையை அதிகரிக்கிறது.

நடைபயிற்சி உடல் வலிமையை சீராக்குகிறது. நடைப்பயிற்சி தோல் நோய்களைத் தடுக்கிறது.

மொத்தத்தில் நடைப்பயிற்சி உடல் எடை மேலாண்மை, இதய ஆரோக்கியம், எலும்புகளை வலுப்படுத்துதல், மன அழுத்தத்தைக் குறைத்தல், மனநிலையை மேம்படுத்துதல், மற்றும் நீரிழிவு போன்ற நோய்களைத் தடுப்பது உள்ளிட்ட பல்வேறு நன்மைகளைக் கொண்டுள்ளது. இது எளிமையான, ஆனால் மிகவும் பயனுள்ள உடற்பயிற்சியாகும், இது பலரும் தங்கள் அன்றாட வாழ்வில் பின்பற்றலாம்.



# வரலாற்றுக்குச் சான்று கூறும் கிராமம்!

குயப்பாளையம்... என்பது கொசப்பாளையம்... குயவர்கள் வாழ்ந்த பகுதி.

வெண்ணிக் குயத்தி என்ற சங்கப்புலவர் போர் நடந்த வெண்ணி என்ற ஊரினர். இன்று கோயில் வெண்ணி என்ற ஊர் தஞ்சை அருகே உள்ளது.

குயப்பாளையம் அருகில் உள்ளது அன்னியூர். அன்னி, அன்னி IDL என்று சங்கக்காலச் சிற்றரசர்கள் இருந்தனர்.

அன்னியூரில் சிவன், திருமால் கோயில்கள் உள்ளன. அருகில் உள்ள கீழ்வாலையில் சித்திர எழுத்துகள், மீன் சின்னம் உள்ளன. மண்டகப்பட்டு முதல் குகைக்கோயில், பனைமலை முதல் கற்கோயில் அருகில் உள்ளன.

போரூர், பட்டாளக் கொல்லை, அடங்குணம், நன்னீர்க்குளம், அந்தியூர், சத்திரம் , மழைவன் தாங்கல் முதலிய ஊர்களில் ஏரி, குளம், சத்திரம், மண்டங்கள், நடுகல் போல் சிறு கற்களை மட்டும் நிறுத்தியுள்ள சிறு கோயில்கள் உள்ளன. முன்பு இங்கு தாழிகள் நிறைய கிடைத்தன.

இருபது இலக்கம் ஆண்டுகள் முந்தைய திருவக்கரை கல்மரங்கள் பாதிக்கு மேல் உடைக்கப்பட்டுள்ளது போல்....

மண்டகப்பட்டில் கிடைத்த தமிழி எழுத்துகள் இப்போது சிதைந்துள்ளன.

ஆறு மலைகளை இணைத்து நடுவில் பெரிய ஏரி இருந்தது. இப்போது ஊர்க்காடு ஆகிவிட்டது.

மழைவந்தாங்கல் ... பெருமழைக் காலங்களில், சுற்றிலும் பல ஊர்களில் உள்ளவர்கள் வந்து தஞ்சம் புக உயர்ந்த பகுதி.

மழை வடிய 4 ஆண்டுகள் கூட ஆகுமாம்.

அப்போது அங்கு வந்து தங்கிவிட்ட சினை ஆடு குட்டிகள் போட்டு மந்தை ஆகியது.

இதனை நான்கு ஆண்டுகளும் மலைமேல் இருந்து மக்கள் பார்த்தனர்.

மழைநீர் வடிந்து நான்கு ஆண்டுகள் சென்று ஆட்டுமந்தை ஊர்க்கு வந்தது.

என் ஆடு எனப் பலர் போட்டியிட,ஊர்நாட்டாண்மை தலை (மை) ஆடு யார் வீட்டுக்குள் செல்கிறதோ அவர்களுடையது என்றார். உண்மையிலேயே ஒருவர் வீட்டுக்குள் நுழைய மற்ற ஆடுகளும் அவ்வீடு சென்றன.

வீட்டில் உள்ளவர்களை அடையாளம் கண்டு பிடித்தது போல், அவ்வீட்டாரும் அண்டை வீட்டாரும் தலைமை ஆட்டை அடையாளம் கண்டு மகிழ்ந்தனராம்.

– தமிழறிஞர் இறையரசன்

# செக்கிழுத்த செம்மல் வ.உ.சியின்
# தியாக வரலாறு!

ஆங்கிலேயர்களை இந்திய சுதந்திர போராட்ட வீரர்கள் பல வழிகளில் எதிர்த்தனர். இவர்களில் வ.உ.சி 'ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை அடக்க முதலில் அவர்களுக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்த வேண்டும்' என தீர்மானித்தார். அதன் ஒரு பகுதியாக

ஆங்கிலேயர்களுக்கு எதிராக சொந்தமாக நாமே கப்பல் வாங்க வேண்டும் என வ.உ.சி முடிவு செய்தார்.

தன்னுடைய சொந்த நிதியாக ரூ 40,000 செலுத்தினார். பின்னர், ஒவ்வொருவரிடமும் 25 ரூபாய் வீதம் 40,000 பேரிடம் ரூ.10 லட்சம் நிதி திரட்டினார். இவர்கள் அனைவரும் இந்த கப்பல் நிறுவனத்தின் ஷேர் ஹோல்டர்ஸ் தான்.

(1906ல் 25 ரூபாயின் இன்றைய மதிப்பு 80,000 ரூபாய். அன்றைய 10 லட்சம், இன்றைக்கு 3,356 கோடி ரூபாய்)

நிதியை திரட்டிய பின் மும்பை சென்ற வ.உ.சி கப்பல் வாங்க பேச்சுவார்த்தை நடத்தினார். கப்பல் வாங்க அப்போது முழு தொகையும் இல்லாததால் கப்பலை விற்க அவர்கள் சம்மதிக்க வில்லை.


வேறு வழியில்லாமல் பாலகங்காதர திலகருக்கு வ.உ.சி டெலிபோன் செய்து சூழ்நிலையை விளக்குகிறார். 'இந்த கடன் தொகைக்கான ஜாமீனை நான் ஏற்கிறேன். நீங்கள் தாராளமாக அவருக்கு கப்பலை விற்கலாம்' என திலகர் சொன்னதும் பிரான்ஸ் நாட்டு உரிமையாளர் ஒப்புக் கொண்டார்.

1906ல் முதன் முதலாக பிரான்ஸ் நிறுவனத்திடமிருந்து 'S.S Gaelia' என்ற பெயருடைய கப்பல் ரூ.2 லட்சம் செலுத்தி வ.உ.சி வாங்கினார்.

இதற்கு பின்னர் 1907ல் நெதர்லாந்து நிறுவனத்திடமிருந்து 'S.S Lawoe' என்ற கப்பல் ரூ 1.5 லட்சம் செலுத்தி வாங்கப்பட்டது.

இந்த இரண்டு கப்பல்களும் தூத்துக்குடிகொழும்பு வர்த்தகத்தில் மட்டுமே ஈடுப்பட்டன. வேறு நாடுகளுக்கு செல்லவில்லை.

கப்பல்கள் இயங்க தொடங்கியதும், 'நம் வியாபாரத்தை முடக்க நினைக்கும் வ.உ.சியை சும்மா



விடக் கூடாது' என ஆங்கிலேயர்கள் கடுங்கோபத்துடன் இறங்கினார்கள்.

முதலில் தூத்துக்குடியில் இயங்கிய ஆங்கிலேய கப்பல்களின் கட்டணத்தை வெகுவாக குறைத்தார்கள். சில நேரங்களில் கட்டணம் இல்லாமல் இலவசமாகவே வியாபாரிகளையும், பயணிகளையும் ஏற்றி சென்றனர்.

வியாபாரிகளும் மக்களும் ஆங்கிலேய கப்பலுக்கு சென்றனர். இதனால், வ.உ.சியின் நிறுவனத்திற்கு இழப்பு ஏற்பட்டது. கடன் செலுத்த வேண்டும், வட்டி செலுத்த வேண்டும். நிதி இல்லாமல் தவித்தார்.

பின்னர், தன்னோட சொத்துக்களை அடமானம் வைத்து கடனையும், வட்டியை செலுத்தினார்.

சுப்ரமணிய சிவா, பாரதியார் ஆகியோருடன் இணைந்து சுதந்திர போராட்டத்திலும் வ.உ.சி ஈடுப்பட்டு வந்தார்.

கப்பல்கள் தொடர்ந்து இயங்குவதை கண்டு கோபமுற்ற ஆங்கிலேயர்கள் வ.உ.சியை கைது செய்ய முடிவு செய்தனர். 1908ல் வ.உ.சி கைது செய்யப்பட்டார்.

வ.உ.சி சிறைக்கு போனதும் கப்பல் நிறுவனம் தள்ளாடியது. நிர்வாகத்தை நடத்த முடியவில்லை. கடனையும், வட்டியையும் செலுத்த முடியவில்லை.

இறுதியாக பல தவணைகளை செலுத்த தவறிய காரணத்தினால் ஆங்கிலேயர்கள் இரண்டு கப்பல்களையும் சீஸ் செய்தனர். பின்னர் அவற்றை விற்ற நிறுவனங்களுக்கே ஆங்கிலேயர்கள் திருப்பி கொடுத்து விட்டனர்.

1911ல் வ.உ.சியின் லட்சியத்தில் பிறந்த கப்பல் நிறுவனம் நிரந்தரமாக மூடப்பட்டது.



வ.உ.சி அடமானம் வைத்த சொத்துக்களையும் ஆங்கிகேயர்கள் அபகரித்தனர்.

SS Gaelia கப்பல் ஒன்றரை ஆண்டும், SS Lawoe கப்பல் 10 மாதங்கள் என இரண்டு கப்பல்களும் சுமார் 40 பயணங்களை மட்டுமே மேற்கொண்டன.

1912ல் சிறையிலிருந்து வெளியே வந்த வ.உ.சியிடம் ஒன்றுமே இல்லை. சில ஆண்டுகளுக்கு முன் தூத்துக்குடியின் செல்வந்தராக திகழ்ந்த அவரிடம் இப்போது அடுத்த வேளை உணவுக்கு கூட பணம் இல்லை.

வ.உ.சி கைது செய்யப்பட்டு சிறையில் இருந்ததால் அவருடைய வழக்கறிஞர் உரிமத்தையும் ஆங்கிலேயர்கள் ரத்து செய்தனர். வழக்காட செல்ல முடியவில்லை.

நண்பர்கள் சிலர் உதவினர். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விற்பனை செய்து அதில் கிடைத்த பணத்தில் வீட்டில் சமையல் நடந்தது.

சரியான உணவு இல்லாததாலும், மனக்கவலையாலும் உடல்நிலை மோசமடைந்து தன்னுடைய 64வது வயதில் படுக்கையிலேயே காலமானார்.

பாரதியார் இறந்தபோது வெறும் 17 பேர் மட்டுமே வந்தது போல வ.உ.சி இறந்த போதும் அவர் வீட்டிற்கு எவருமே வரவில்லை. உறவினர்கள் மட்டுமே நல்லடக்கம் செய்தனர்.

தேசத்துரோக குற்றத்திற்காக பிரிட்டிஷ் அரசு அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது. கோவை மற்றும் கண்ணனூர் சிறைகளில் தண்டனையை அனுபவித்தார்.தனது 36வது வயதில் 40 வருட தீவாந்திரத் தண்டனை! யாருக்கும் கொடுக்கப்படாத கொடுமையான தண்டனையை அனுபவித்தார். சிறையில் வ.உ.சி. கடுமையான வேலைகளைச் செய்தார்.

சிறையில் வ.உ.சி. கடுமையான வேலைகளைச் செய்தார். சணல் நூற்றார். கல் உடைத்தார். மாடுகள் இழுக்கும் செக்கினை இழுத்தார். அதனாலேயே இவர் 'செக்கிழுத்த செம்மல்' என அழைக்கப்படுகிறார். கடுமையான போராட்டத்திற்கு பிறகு இவரின் தண்டனை பாதியாக குறைக்கப்பட்டது.

கடுமையான தண்டனைக்கு பிறகும் தன் கடைசி மூச்சு வரை ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து வந்த வ.உ.சி 1936ஆம் ஆண்டு நவம்பர் 18ம் தேதி மறைந்தார்.



# குறைந்த அகலம் கொண்டு ஓடும் சீன நதி

நதிகள் என்றவுடன் அகண்டு விரிந்து பல கிலோமீட்டர்களுக்கு கடந்து செல்வதோடு, இரு நாடுகளுக்கும் இடையில் பாயும் நதிகள் ஏராளம் உள்ளன. ஆனால் சில சென்டிமீட்டர் மட்டுமே அதாவது ஒரே தாவலில் கடக்க கூடிய உலகின் மிகக் குறுகலான நதி வடக்கு சீனாவின் மங்கோலியா பகுதியில் அமைந்துள்ள ஹுவாலை (Hualai) நதி தான் உலகிலேயே மிக குறுகலான நதி ஆகும்.

இந்த நதியானது 17 கிலோமீட்டர் மட்டுமே நீளம் கொண்டது. அதன் அகலம் வெறும் 4 செமீ முதல் 15 சென்டிமீட்டர் வரை மட்டுமே.

Hualai போன்ற ஒரு நதி உண்மையில் இருக்கிறது என்பதை நம்புவது கடினம். ஆனால் சீன நிபுணர்களின் கூற்றுப்படி, அது குறைந்தது 10,000 ஆண்டுகளாக கோங்கர் புல்வெளி வழியாக பாய்கிறது என்கின்றனர்.

ஹுவாலை நதி ஒரு நிலத்தடி நீரூற்றில் இருந்து உருவாகிறது. ஹெக்சிக்டன் புல்லேண்ட்ஸ் இயற்கை காப்பகத்தில் உள்ள தலாய் நூர் ஏரியில் பாய்கிறது.

ஹுவாலையை நதியாகக் கூட கருத முடியாத அளவுக்கு குறுகலானது என்று சிலர் கூறினாலும், ஆறுகள், ஓடைகள் மற்றும் சிற்றோடைகளுக்கு இடையே அளவு வேறுபடுத்திக் காட்டும் காரணியாக இல்லை என்பதே உண்மை. இந்த நதி ஒரு நிரந்தர நீர்நிலையாகும். இது ஆண்டு முழுவதும் சீராக பாய்கிறது.

ஹுவாலை 'புத்தகப் பாலம் நதி' என்றும் அழைக்கப்படுகின்றது. ஒரு சிறுவன் ஆற்றைக் கடக்க முயன்றபோது தவறி விழுந்து, தனது புத்தகத்தை ஹுவாலையின் குறுகலான பகுதிகளில் ஒன்றின் மேல் இறக்கி வைப்பது தொடர்பான நாட்டுப்புறக் கதைகள் இருக்கின்றன. மறுகரைக்கு செல்ல முயன்ற எறும்புகளுக்கு, இந்த புத்தகம் பயனுள்ள பாலமாக மாறியதாம். இதனால், புத்தகப் பாலம் நதி என்ற பெயரும் ஒட்டிக்கொண்டது.

ஹுவாலை நதி அகலமாக இல்லாவிட்டாலும், அதன் ஆழம் 50 சென்டிமீட்டர் வரை உள்ளது என்பதும் மேலும் ஒரு ஆச்சரியம்தான்.

உயரமோ, அகலமோ, நீளமோ எவ்வாறு இருந்தாலும் எவ்வளவு தூரம் இருந்தாலும் எந்த நாடாக இருந்தாலும், நதிக்கு முக்கியத்துவம் கொடுத்து முறையாக பராமரித்து, நீர் தேவைகளுக்கும், விவசாயத்திற்கும் பயன்படுத்துவதோடு, நீரை சிக்கனமாக பயன்படுத்தினால் அந்நாட்டு மக்கள் செழிப்பாக இருப்பதோடு, வருங்கால தலைமுறையினருக்கும் நன்மை பயக்கும்!

# இரவில் (WI_FI) நெட்வொர்க் தொடர்ந்து இயங்கலாமா!

**வை**ஃபை என்பது கணினிகள் மற்றும் ஸ்மார்ட்போன்கள் போன்ற சாதனங்களை கேபிள்கள் இல்லாமல் ஒரு நெட்வொர்க்குடன் இணைக்கும் ஒரு தொழில்நுட்பம் ஆகும். இது வயர்லெஸ் ரூட்டரைப் பயன்படுத்தி ஒரு வயர்லெஸ் லோக்கல் ஏரியா நெட்வொர்க்கை (WLAN) உருவாக்குகிறது.

மொபைல் ஃபோன் பழக்கம் நமக்கு எல்லோருக்கும் தெரியும். இப்போது வைஃபை ஒரு புதிய பழக்கமாக வளர்ந்து வருகிறது. ஆனால், இதைப்பற்றி அதிகம் விவாதிக்கப்படாத ஒரு அம்சம் இப்போது விவாதத்திற்கு வந்துள்ளது.

யாராவது இரவு தாமதமாக மொபைல் ஃபோன், டேப்லெட், கணினி அல்லது லேப்டாப்பில் பொழுதுபோக்கு அல்லது வேலைக்காகச் செயல்படும்போது, வைஃபை ரூட்டரும் இரவு முழுவதும் அப்படியே இயக்கத்தில் இருக்க வாய்ப்பு அதிகம்.



அப்படியானால், வைஃபை ரூட்டரை அணைக்காமல் வைத்திருப்பதால் நம் ஆரோக்கியத்தில் ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா? அல்லது அதை அணைப்பதால் ஆரோக்கியத்திற்கு ஏதேனும் நன்மைகள் உண்டா?

இந்தக் கேள்வியை இன்னும் கூர்மையாகக் கேட்டால், இரவில் வைஃபை ஆன் செய்து வைப்பதால் மனித உடலின் நரம்பியல் அம்சங்களுக்கு அல்லது மூளைக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா?

டெல்லிஎன்சிஆர் பகுதியில் உள்ள யசோதா மெடிசிட்டியில் ஆலோசகராகப் (குறைந்தபட்ச ஊடுருவல் கொண்ட நரம்பியல் அறுவை சிகிச்சை) பணிபுரியும் மருத்துவர் திவ்ய ஜோதியிடம் இந்தக் கேள்வி கேட்கப்பட்டபோது, அறிவியல் ரீதியாக இதுவரை அப்படி எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்பதால், நேரடியாக அப்படிச் சொல்ல முடியாது என்று கூறினார்.

"தர்க்கரீதியாகப் பார்த்தால், மூளையின் தூண்டல்கள் மின் தூண்டல்கள் என்பதால், அப்படி நினைக்கலாம். வைஃபை அல்லது பிற சாதனங்கள் மின்காந்த அலைகளை (electromagnetic fields -EMதி) சார்ந்துள்ளன," என மருத்துவர் மேலும் தெரிவித்தார்.

"எனவே, இது மூளையின் தூண்டல்களுடன் குறுக்கிட வாய்ப்புள்ளது. ஆனால், அப்படி யோசிப்பதற்கு எந்தவொரு அறிவியல் காரணமோ, விளக்கமோ அல்லது முடிவோ இதுவரை இல்லை. ஆனால், முடிந்தவரை அதிலிருந்து நாம் விலகி இருக்க வேண்டும் என்றுதான் தர்க்கம் கூறுகிறது."

**மூளைத் தூண்டுதல்கள் என்றால் என்ன?**

மூளைத் தூண்டுதல்கள் (Brain impulses) என்பவை, நியூரான்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளவும், தகவல்களைப் பறிமாறவும் உதவும் மின்னணு வேதியியல் சமிக்ஞைகள் (electrochemical signals) ஆகும். இந்த நரம்புத் தூண்டுதல்கள், செயல் ஆற்றல் (action potential) என்றும் அழைக்கப்படுகின்றன.

இந்தத் தூண்டுதல்களை மூளைக்கு எடுத்துச் செல்லும் நரம்புக்கு உணர்ச்சி நரம்பு (sensory nerve) என்று பெயர். இந்த நரம்புகள் மூளைக்கு செய்திகளைக் கொண்டு செல்வதால்தான், நம்மால் தொடு உணர்ச்சி, சுவை, வாசனை ஆகியவற்றை உணர முடிகிறது.

இரவில் வைஃபை ரூட்டரை அணைத்து வைப்பது அவசியம் என கூறினால் பகலில் ஏன் அணைத்து வைக்க தேவையில்லை?

இந்தக் கேள்விக்கு பிபிசியிடம் பதிலளித்த மருத்துவர் திவ்ய ஜோதி, "பகல் மற்றும் இரவில்

உடலின் செயல்பாடுகள் வேறுபடுகின்றன. இரவில் உடலின் அலைகள் வேறுபட்டவை, அவை தூக்க அலைகள். இரவில் நல்ல தூக்கம் பெறுவது மிகவும் முக்கியமானது. அது தூக்க சுழற்சியால் தீர்மானிக்கப்படுகிறது.

"அதனால்தான், இரவில் அதை அணைத்து வைக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. இதனால், மூளைக்கு முழுமையாக ஓய்வு கிடைத்து, நல்ல தூக்கம் கிடைக்கும். ஆனால், பகல் நேரத்தில் நாம் வேலை செய்ய வேண்டும் என்பதால், தூக்கத்தில் குறுக்கீடு இல்லை. ஆனால், இந்த வெளிப்பாடு எவ்வளவு குறைவாக இருக்கிறதோ, அவ்வளவு நல்லது என்பதுதான் தர்க்கம்.

ஆனால், இரவில் வைஃபையை மட்டும் தவிர்ப்பது போதுமா? நாம் அடிக்கடி தலையணைக்கு அருகில் வைத்துத் தூங்கும் மொபைல் ஃபோன்கள் பாதிப்பை ஏற்படுத்தாதா?



இதற்கு மருத்துவர், மொபைல் ஃபோன்களும் மைக்ரோவேவ்களை அடிப்படையாகக் கொண்டவை என்று கூறுகிறார். அவையும் ஒரு வகையான கதிர்வீச்சை உருவாக்குகின்றன. ஆனால், அவற்றின் அதிர்வெண் (frequency) வேறுபட்டது. தர்க்கரீதியாகப் பார்த்தால், இவை கூட தூக்கத்தில் குறுக்கிடலாம். நீங்கள் மொபைல் ஃபோனைப் பயன்படுத்தாமல் இருந்தாலும் கூட, மின்காந்த அலைகள் இருந்துகொண்டே இருக்கும்.

"பின்னணிக் கதிர்வீச்சோடு ஒப்பிடும்போது, மொபைல் ஃபோன் மற்றும் வைஃபை ஆகியவற்றிலிருந்து வரும் கதிர்வீச்சு மிகக் குறைவு. இவை இரண்டிலிருந்தும் வெளிப்படும் கதிர்வீச்சு அதிகமாகுமா என்றால், இல்லை. இதற்கு மாறாக, நம் மீதான பின்னணிக் கதிர்வீச்சின் தாக்கம் மிகவும் அதிகம்," என்று மருத்துவர் திவ்ய ஜோதி தெரிவித்தார்.

நிபுணர்களின் கூற்றுப்படி, நம் வீடு மற்றும் அலுவலகங்களில் உள்ள அனைத்து வகையான சாதனங்களிலிருந்தும் கதிர்வீச்சு வெளிப்படுகிறது. டிவி, பிரிட்ஜ் முதல் ஏசி வரை. எந்த மின் சாதனமாக இருந்தாலும், மின்காந்த அலைகள் அதனுடன் தொடர்புடையவை.

சில நிபுணர்கள், மின்காந்த அலைகள் அளவுக்கு அதிகமாக வெளிப்படுமோ என்று பயந்தால், நீங்கள் தூங்கும் அறையில் ரூட்டரை வைப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்கள். அல்லது அது சாத்தியமில்லை என்றால், படுக்கையிலிருந்து ரூட்டரை சற்றுத் தள்ளி வைக்கலாம்.

மருத்துவத் துறை நிபுணர்களைத் தவிர, தொழில்நுட்பத் துறை நிபுணர்களுடனும் நாங்கள் பேசினோம். இந்த விஷயம் குறித்து துல்லியமான தகவல்கள் எதுவும் இல்லை. இதனால், குழப்பம் அதிகமாக உள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர்.

தொழில்நுட்ப நிபுணர் முகமது ஃபைசல் அலி, "நல்ல தூக்கத்தைப் பெற இரவில் வைஃபையை அணைக்க வேண்டும் என்பதை நிரூபிக்க எந்த ஆய்வும் இல்லை" என்றார்.

"அல்லது வைஃபையை ஆன் செய்து வைத்திருப்பது நமது நரம்பியல் அல்லது வேறு எந்த அமைப்பையும் பாதிக்கிறது என்பதை நிரூபிக்கவும் ஆய்வு இல்லை. ஆனால், எந்தவொரு அலைகளின் தாக்கமும் நீண்ட காலத்திற்கு ஏற்படும் போது விளைவை ஏற்படுத்தலாம் என்று கூறலாம். இது ஒரு பொதுவான விஷயம்."

கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவில் மொபைல் மற்றும் வைஃபையின் வளர்ச்சி மிக அதிகமாக உள்ளது," என அலி பிபிசியிடம், கூறினார்.

"எனவே, எதிர்காலத்தில் ஒரு ஆய்வு நடத்தப்படலாம். அதில், இந்த விஷயங்களால் இந்தந்த பாதிப்புகள் ஏற்படலாம் ஆகவே, அவற்றைக் குறைவாகவே பயன்படுத்த வேண்டும் என்று ஒரு முடிவுக்கு வரலாம். ஆனால், இதுவரை அப்படி எதுவும் இல்லை."

மொபைல் ஃபோன்களில் சொந்த இணைய வசதியும் உள்ளது. இந்தத் தர்க்கம் அவற்றுக்கும் பொருந்துமா?

"மின்காந்த அலைகளோ அல்லது ரேடியோ அலைகளோ, எதுவாக இருந்தாலும் அதிகமாக அவற்றின் தாக்கத்திற்கு உள்ளாவது நல்லதல்ல என்று ஒரு உணர்வு உள்ளது. இப்போது நம்மிடம் சிறந்த தரவுகள் இருப்பதால் இப்போது இது குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும். எனக்கு தெரிந்தது மற்றும் புரிதலின்படி, பல நேரங்களில் அதைப் பார்த்து பயப்படும் அளவு இவற்றால் அவ்வளவு பாதிப்பு ஏற்படாது" என்று கூறினார் அலி.

– பொள்ளாச்சி முத்துராஜ்

# கோபம் வந்தால் பாதிக்கப்படும் உடல் நிலை!



உண்மையான பலசாலி யாரெனில் தன் வலிமையால் மக்களை அடக்குபவன் அல்ல. மாறாக கோபம் வரும்போது தன்னை அடக்கிக் கொள்பவனே ஆகும். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு, ஆத்திரம் அழிவைத் தரும்.

கோபம் ஏன் ஏற்படுகிறது?

கோபம் என்பது உடல் ரீதியாக, மன ரீதியாக, சமூக ரீதியாக, உளவியல் ரீதியாக, உணர்ச்சிப்பூர்வமான, சுற்றுச்சூழல் சார்ந்த பல விஷயங்களுடன் நமக்கு உண்டாகும் எதிர்மறையான சூழ்நிலை காரணமாக ஏற்படுகிறது.

நாம் சொல்வதை (நம்மைவிட எளியவர்கள் என்று நாம் நினைக்கும்) மற்றவர்கள் மதிக்காத போது, நமது பிரச்சனைகளை உரியவர்கள் உடனே நிவர்த்தி செய்யாத போது, நாம் சொல்வது (தவறாகவே இருந்தாலும்) தவறு என்று பலர் முன்னிலையில் விமர்சிக்கப்படும் போது.

எதிர்பார்த்த மரியாதை கிடைக்காத போது இப்படியே பல காரணங்கள் உள்ளன.

ஒருவன் நம்மைப் பார்த்து கழுதை என்று திட்டும்போது நாம் குரங்கு என்று பதிலுக்குத் திட்டினால் அந்தச் செயல்தான் எதிர்வினை ஆகும்.

ஆக உடனே சிந்திக்காமல் ஏற்படும் ஒரு வித அதிருப்தியான வெளிப்பாடு தான் கோபம். அல்லது நம்மை நாமே தாழ்த்திக் கொண்டு சிந்திக்கும் போது ஏற்படும் எதிர் விளைவு கோபமாகும். கோபம் தன்னையே அழித்து விடும்:

மனிதத்துவம் என்பது சமூகத்துடன் ஒன்று வாழ்வதாகும். ஒருவருக்கொருவர் அனுசரித்து பாராட்டி உதவி செய்து வாழ்வதாகும். இதற்கு பொறுமை இன்றியமையாததாகும். ஒரு மனிதனின் வெற்றிக்கு தடையாத இருப்பதில் மிக முக்கியமானது கோபமாகும்.

கோபம் கொள்வதால் நமது சிந்தனை, கவனம் போன்றன சிதறடிக்கப்படுகின்றன. சரியான நேரத்தில் செய்ய வேண்டிய செயல்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன. நம்மை சுற்றி இருப்பவர்களைப் பற்றியும் சூழ்நிலையையும் உணராது நமது செயல்கள் பெரிய பின் விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. அவற்றுள்

வாழ்வின் சந்தோசத்தை பறித்து விடும். (கோபமும் சந்தோசமும் ஒன்றுக்கொன்று எதிரானவை)

திருமணம் மற்றுமுள்ள தொடர்புகளை அழித்து விடும்.

தொழிலை முடக்கி விடும். காரணம் தொழில் என்பது தொடர்புகளுடன் தொடர்புடையது.

மன நிலையை ஏற்படுத்தி இருதய வியாதிக்கு தூண்டுகிறது.

முறையாக சிந்தித்து செயல்படுவதை தடுத்து நமது செயல்களை தவறானதாக்கி விடுகின்றது .கோபம், மாரடைப்பு முதலான இருதய நோய்களை உண்டாக்கி உயிரைப் பறித்து விடும் என்று வல்லுநர்கள் கூறுகின்றார்கள். 55 வயதுக்கு கீழே உள்ளவர்கள் கோபப்பட்டால் அவர்கள் மாரடைப்பு உள்ளிட்ட இருதய வியாதிகளால் உயிரிழப்பதற்கான வாய்ப்பு 3 மடங்கு ஆகும். ஆனால் 55 வயதுக்கு கூடுதலாக இருந்தால் உயிரிழப்பு ஆபத்து 6 மடங்காக உயர்கிறது.


கோபமானது இதய ரத்த நாளங்களை கடினமாக்கும் அடைப்புகளை திடீரென சிதைப்பதால், அங்கே அடைப்பு வேகமாக உண்டாக வாய்ப்பு ஏற்படும். இது மாரடைப்பில் விட்டு விடும்.

இதயத் தசைகளில் வலிப்பு, இதயத் துடிப்பில் பாதிப்பு, உயர் ரத்த அழுத்தம், ஆஞ்சைனா எனப்படும் நிலையற்ற நெஞ்சுவலி போன்ற சிக்கல்களும் கோபத்தினால் ஏற்படும் விளைவுகள் தான்.

மூளையை தாக்கும் பக்கவாதத்துக்கு கூட கோபம் காரணமாக அமைவதுண்டு. ஆக, கோபம் உங்களை அழிப்பதற்கு முன் நீங்கள் அதை அழித்து விட வேண்டியது முக்கியம்!

## மித்ரா டாக்கீஸ்

"கடந்த வாரம் வெளியான சக்தித் திருமகன்" நடிகர் விஜய் ஆண்டனி நடிக்கும் 25வதுதிரைப்படம். இந்த படத்தை அருண் பிரபு இயக்கியுள்ளார். அருண் பிரபு இயக்கத்தில் இதற்கு முன் அருவி மற்றும் வாழ் போன்ற வெற்றித் திரைப்படங்கள் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. இப்படத்தின் கதாநாயகியாக த்ரிப்தி நடித்திருக்கிறார். விஜய் ஆண்டனியின் வழக்கமான ப்ரோமோஷனான படத்தின் முதல் 4 நிமிட காட்சியை தற்பொது வெளியிட்டுள்ளார். அதில் ஒரு பழங்குடிப்பெண்ணை கற்பழித்து கொலை செய்துள்ளனர், அவருகு ஒரு கைக்குழந்தை இருக்கிறது. இந்த கொலையை மறைக்க ஏபி க்ரூப்ஸ் கம்பெனி நுழைகிறது. கைக்குழந்தையை குப்பை மேட்டில் காவல் அதிகாரிகள் வைத்துவிட்டு செல்கின்றனர். ஸ்னீக் பீக் காட்சி படத்தின் மீதுள்ள எதிர்ப்பார்ப்பை அதிகரித்துள்ளது.







நடிகர் விஜயகுமார் மகன் நடிகர் அருண் விஜய். இவர் தற்போது கிரிஷ் திருக்குமரன் இயக்கத்தில் 'ரெட்ட தல' என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படத்தில் அருண் விஜய் இரட்டை வேடங்களில் நடிக்கிறார். இப்படத்தில் தான்யா ரவிச்சந்திரன், சித்தி இத்னானி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பிடிஜி யுனிவர்சல் நிறுவனம் தயாரிக்க சாம்.சி.எஸ் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

இந்த படத்தில் அருண் விஜய் வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடித்திருப்பதாகவும், 'ரெட்ட தல' படம் அடுத்தடுத்த திருப்பங்களுடன் உருவாகியுள்ளதாக கூறப்படுகிறது. ஏற்கனவே இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் முழுவதும் நிறைவடைந்த நிலையில் படம் வெளியாக உள்ளது

இந்த நிலையில், 'ரெட்ட தல' படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் புரோமோவை படக்குழு வெளி யிட்டுள்ளது. படத்தின் கண்ணம்மா பாடலை தனுஷ் பாடியுள்ளார்.

பாலாஜி வேணுகோபால் இயக்கத்தில் குமரன் தங்கராஜ் நடித்த படம்'குமார சம்பவம். சமூக பிரச்சினைகளுக்காக போராடி வரும் குமாரவேலுக்கு, வாடகைக்கு வீடு கொடுத்து நெருங்கிய நண்பராகிறார் ஜி.எம்.குமார். ஆனால் குமாரவேலுக்கும், ஜி.எம்.குமாரின் பேரனான குமரன் தங்கராஜுவுக்கும் ஆரம்பத்தில் இருந்தே முட்டிக்கொள்கிறது. சினிமா டைரக்டராக போராடும் பேரன் குமரனுக்காக, சொந்த வீட்டை விற்று பணம் தர முடிவு செய்கிறார் ஜி.எம்.குமார். அப்படி கிடைக்கும் பணத்தில் ஒரு பங்கை குமாரவேலுக்கு தரவேண்டும் என்று ஜி.எம்.குமார் உயில் எழுதிவைக்கிறார்.இதனால் குமரனுக்கு கோபம் கொப்பளிக்க, திடீரென குமாரவேல் மர்மமான முறையில் உயிரிழக்கிறார். அனைவரது சந்தேகப்பார்வையும் குமரன் மீது விழுகிறது. போலீசார் விசாரணையை தொடங்குகிறார்கள். அதன்பிறகு என்ன ஆனது? குமாரவேலின் மர்மத்துக்கு என்ன காரணம்? என்பதை தியேட்டரில் போய் பார்த்து தெரிந்து கொள்ளலாம். சின்னத்திரையில் ஜொலித்த குமரன் தங்கராஜ், முதல் படத்திலேயே காமெடி, ஆக்ஷன், காதல் என முடிந்தவரை 'ஸ்கோர்' செய்துள்ளார். முக பாவணைகளிலும் திறமையை பளிச்சிட செய்துள்ளார். பாயல் ராதாகிருஷ்ணா அழகாலும், நடிப்பாலும் கவருகிறார். ஜி.எம்.குமார், குமாரவேலின் அனுபவ நடிப்பு கவனிக்க வைக்கிறது. பால சரவணனின் காமெடி பரவாயில்லை. ஜெகதீஷ் சுந்தரமூர்த்தியின் ஒளிப்பதிவும், அச்சு ராஜாமணியின் இசையும் படத்துக்கு வலிமை சேர்த்து இருக்கிறது.






ஜெய் ஸ்டுடியோ கிரியேஷன்ஸ் என்ற பட நிறுவனம் சார்பில், சாய் காவியா சாய் கைலாஷ் வழங்க, பத்மராஜ ஜெய்சங்கர் தயாரிப்பில், பாஸ்கர் சதாசிவம் இயக்கத்தில், சமூக அக்கறை மிக்க களத்தில், கலக்கலான காமெடி எண்டர்டெயினராக உருவாகியுள்ள திரைப்படம் "உருட்டு உருட்டு". நாகேஷின் பேரன் கஜேஷ் நாகேஷ் இந்த படத்தில் கதாநாயகனாக நடித்துள்ளார். கதாநாயகியாக ரித்விகா ஸ்ரேயா நடித்துள்ளார். மொட்டை ராஜேந்திரன், அஸ்மிதா, ஹேமா சின்னாலம்பட்டி சுகி, பாவா லட்சுமணன், சேரன் ராஜ், மிப்பு, நடேசன், அங்காடித்தெரு கருப்பையா ஆகியோர் நடித்துள்ளனர். இவர்களுடன் தயாரிப்பாளர் பத்ம ராஜு ஜெய்சங்கர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். இவர்களுடன் தயாரிப்பாளர் பத்ம ராஜு ஜெய்சங்கர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

**தொழில் நுட்ப குழு விபரம்**

ஒளிப்பதிவு – யுவராஜ் பால்ராஜ்

பாடல் இசை – அருணகிரி

பின்னணி இசை – கார்த்திக் கிருஷ்ணன்

பாடல்கள் – பெப்சி தாஸ், பாஸ்கர்

எடிட்டிங் – திருச்செல்வம்.

நடனம் – தினா

விளம்பர வடிவமைப்பு – விஜய் கா. ஈஸ்வரன்

மக்கள் தொடர்பு – புவன் செல்வராஜ்

தயாரிப்பு – பத்ம ராஜு ஜெய்சங்கர்.

கதை திரைக்கதை வசனம் எழுதி இயக்கியுள்ளார் பாஸ்கர் சதாசிவம்.

# இசை பயணத்தில் இளையராஜாவின் 50 ஆண்டுகள்!







தமிழ் திரை உலகில் இசையை ஒரு புதிய உலகத்துக்கு அழைத்துச் சென்ற பெருமை இளையராஜாவுக்கு உண்டு. பெரும்பாலும் நகரத்தை சுற்றியே திரைப்பட பாடல்கள் வந்த காலத்தில் 19 76 ஆம் ஆண்டு அன்னக்கிளி என்ற படத்தில் முழுக்க முழுக்க கிராமத்தை சுற்றி சுற்றி வந்த பாடல்கள் மூலமாக இளையராஜா அடுத்த பரிணாமத்தை திரையுலகத்தை மட்டுமல்ல ரசிகர்களின் கூட்டிச் சென்றார் என்பது தான் உண்மை. அந்தப் படத்தில் வந்த அத்தனைப் பாடல்களும் உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களின் ஒவ்வொரு வீட்டிலும் வானொலி மூலம் கேட்கப்பட்டது. முதல் படத்திலேயே உலகத்தை திரும்பி பார்க்க வைத்தார் இளையராஜா. தன்ராஜ் மாஸ்டர் டிவி கோபாலகிருஷ்ணன் ஆகியோரிடம் இசைப் பயிற்சி பயின்ற இளையராஜா திரைப்பட இசை அமைப்பாளர் ஜி கே வெங்கடேஷ் குழுவில் கிடார் வாசிப்பாளராக சேர்ந்தார். தேனி மாவட்டம் பண்ணைபுரத்தில் பிறந்த ராசையா என்பவர் ராஜாவாக பெயர் மாற்றப்பட்டு, அந்தப் பெயர் மீண்டும் இளையராஜா என்று ஆனது.

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் இசைஞானி என்ற பட்டம் வழங்கப்பட்டு அன்று முதல் இசைஞானி இளையராஜா என்று கொண்டாடப்பட்டு வருகிறார். இயக்குனர் இமயம் பாரதிராஜா அவர்களின் 16 வயதினிலே படத்தில் இவர் இசையமைத்து அதில் நடித்த கமலஹாசன் ரஜினிகாந்த் ஆகியோருடன் இன்றளவும் நட்பு பாராட்டி வருவது சிறப்புக்குரியது.

1400 படங்களில் 7000 பாடல்களுக்கு இசையமைத்துள்ளார் என்பது மிகப் பிரம்மாண்டமான சாதனை. ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர், பாடிய ஜனனி ஜனனி ஜகம் நீ என்ற பாடல் பாடப்படாத இசைக் கச்சேரியே இல்லை. சமீபத்தில் கங்கைகொண்ட சோழபுரம் வந்த பாரத பிரதமர் மோடி முன்பாக இவர் சிம்பொனி இசையில் திருவாசகத்தை பாடினார் .அந்தப் பாடல் முடிந்தவுடன் பிரதமர் மோடி அவர்கள் எழுந்து இன்று கைதட்டினார். அப்போது இளையராஜா நெகிழ்ந்து போய் இரு கைகளை தலைக்கு மேலே உயர்த்தி வணங்கினார் .இதை கண்ட அங்கு குவிந்திருந்த மக்கள் உருகிப் போனார்கள்.

அன்னக்கிளி முதல் விடுதலை _2 வரை 50 ஆண்டுகள் இசை உலகை ஆட்சி செய்து வரும் இளையராஜா பத்மபூஷன் விருது பெற்றிருக்கிறார். நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

இசை ஞானி இளையராஜா எழுத்தாளரும் கூட ஏறத்தாழ 20 புத்தகங்களுக்கு மேல் எழுதி இருக்கிறார். தன்னுடைய இசையின் மூலம் தமிழகத்திற்கு உலகறிய பெருமை சேர்த்த இளையராஜா நீடூடி வாழ வேண்டும் என்று மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்து தெரிவிக்கிறோம்.

# நோய்களைத் தடுக்கும் இயற்கை மருந்து
# துளசி தண்ணீர்!



குளிர்காலங்களில் மாறிவரும் பருவநிலைக்கேற்ப எல்லோருக்கும் சளி இருமல் வரும் அதை எளிய முறையில் துளசி தண்ணீர் குடித்து தீர்க்கலாம் என்ற அனுபவம் மிக்க முன்னோர்களின் வாக்கு.

தேவையான பொருட்கள் துளசி இலைகள் - 10 முதல் 12 (புதிய இலைகள் சிறந்தது). தண்ணீர்- 2 கப், விருப்பமெனில் - சிறிது தேன் / எலுமிச்சை சாறு

செய்முறை: ஒரு பாத்திரத்தில் 2 கப் தண்ணீரை எடுத்து சூடாக்கவும்.

தண்ணீர் கொதிக்கும்போது அதில் துளசி இலைகளைச் சேர்க்கவும்.

மிதமான சூட்டில் 7-10 நிமிடங்கள் கொதிக்க விடவும்.

நிறம் மாறியதும் அடுப்பை அணைத்து வடிகட்டவும்.

வெதுவெதுப்பாகக் குடிக்கலாம். விருப்பமெனில் தேன் அல்லது எலுமிச்சைச் சாறு சேர்த்துக் குடிக்கலாம்

இதன் மருத்துவ குணங்கள்:

நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பு. துளசியில் உள்ள இயற்கை மூலப்பொருட்கள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை பலப்படுத்துகின்றன.

சளி, காய்ச்சல், இருமல் குணமாக்கும். தொண்டை வலி, மூக்கடைப்பு, சளி, இருமல் குறைவதற்கு சிறந்த மருந்து.

சுவாசக் கோளாறு சரி செய்யும்.ஆஸ்துமா, சுவாச பிரச்சினைகளில் துளசி தண்ணீர் நல்ல பலன் தரும்.

செரிமானத்தை மேம்படுத்தும். வாயுத்தொல்லை, அஜீரணம், வயிற்றுப் பெருக்கு குறையும்.

உடல் நச்சுகளை நீக்கும். இரத்த சுத்திகரிப்பு செய்து, தோல் பிரச்சினைகளை குறைக்கிறது.

மனஅழுத்தம் குறைக்கும். துளசி மணமும், சாறும் மன அமைதியைத் தரும்.

சர்க்கரை நோயாளிகளுக்கு உதவும். ரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்துகிறது.

இதய ஆரோக்கியம். கொலஸ்ட்ராலை குறைத்து இதயத்தை பாதுகாக்கிறது.

காய்ச்சல் தடுப்பு.வைரஸ், பாக்டீரியா தொற்றுக்களைத் தடுக்கிறது.

வாய் நாற்றம் நீக்கம்.தொண்டை சுத்தமாகி, வாய் நாற்றம் குறையும்.

## விழாவில் பரிசாக வழங்கக்கூடிய
## உயர்ரக பழவகை மரங்கள் அலங்கார பூச்செடிகள்



- கொய்யா
- மாதுளை
- பலா
- எலுமிச்சை
- நெல்லி
- அரிநெல்லி
- செம்பருத்தி (பல்வேறு நிறங்கள்)
- நந்தியாவட்டை (பல ரகங்கள்)
- பாரிஜாதம்
- மல்லி
- விருட்சி பூ (பல நிறங்கள்)
- மருதாணி
- அரளி (கஸ்தூரி - பல நிறங்கள்)
- வெற்றிலை
- துளசி
- தேக்கு







திருமணம் மற்றும் இல்ல சுப நிகழ்ச்சிகளில் பரிசாக வழங்க

### ஜெயந்தி பூச்செடிகள் தோட்டம்

தமிழ்நாடு அரசு அங்கீகார எண். 1404 / CH 12

அலங்கார பூச்செடிகள், உயர்ரக பழவகை மரங்கள் விற்பனை

கூவம் கிராமம், திருவள்ளூர் மாவட்டம்.

செல் – 94425 18 127

மரம் வளர்ப்போம்!

மழை பெறுவோம்!!

# தில்லை நடராஜரும் திருவாரூர் தியாகராஜரும்: ஒரு ஒப்பீடு!

**சைவ** சமயப் பேருலகின் இரண்டு ராஜாக்களான தில்லை நடராஜருக்கும் திருவாரூர் தியாகராஜருக்கும் உள்ள ஒற்றுமைகளைப் பார்ப்போம்.

தில்லை நடராஜர் திருவாரூர் தியாகராஜர் இருவரும் ஆதிரை நாளில் விழா காண்பவர்கள். திருவாரூரில் நடைபெற்ற திருவாதிரை விழாவின் சிறப்பை அப்பர் அடிகள் பதிகமாகவே பாடியுள்ளார்.

தில்லை நடராஜர் திருவாதிரைக்கு முன்பு, தேர் ஏறி வலம் வந்து அலங்கார அபிஷேகம் கண்டு சபைக்கு எழுந்தருள்கிறார்.தில்லை நடராஜர் திருவாரூர் தியாகராஜர் இருவருமே தேரில் மட்டும் வலம் வருபவர்கள்.

அதன் பிறகு இருவருக்கும் பெரிய அளவில் சாந்தி அபிஷேகம் நடைபெறுகிறது.

தில்லை நடராஜரின் நடனம்: ஆனந்தத் தாண்டவம்.

திருவாரூர் தியாகராஜரின் நடனம்: அஜபா நடனம்.

தில்லை நடராஜர் திருவாரூர் தியாகராஜர் இருவருக்கும் ஆண்டுக்கு ஆறு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. தில்லைக் கூத்தரின் வலப்புறம் தனியாக ஒரு சுவரில் ஆகாச யந்திரம் அமைந்துள்ளது. இது 'சிதம்பர ரகசியம்' என்று போற்றப்படுகிறது.


திருவாரூரில்,தியாகராஜப் பெருமானின் திருமேனியே ரகசியமாகப் போற்றப்படுகிறது. இது 'சோமகுல ரகசியம்' எனப்படுகிறது.

திருவாரூர் தியாகராஜருக்கு உரியது பூங்கோயில் என்றால், தில்லைக் கூத்தனுக்கு உரியது பொற்கோயில். தில்லையில் 96 கண்களைக் கொண்ட வெள்ளியால் போர்த்தப் பெற்ற ஜன்னல் உள்ளது.

திருவாரூரில், 'திருச்சாலகம்' எனும் தென்றல் தவழும் ஜன்னல் உள்ளது. தில்லை நடராஜர், திருவாரூர் தியாகராஜர் இருவருமே செங்கழுநீர். மாலைகளை விரும்பி அணிவதால் செங்கழுநீர் தாமத்தார் என்று சிறப்பிக்கப்படுகின்றனர்.

தில்லை மற்றும் திருவாரூர் இரு இடங்களிலும் யிரங்கால் மண்டபங்கள் உள்ளன. தில்லைப்





பெருமான் ஆகாய வடிவானவர். திருவாரூர்ப் பெருமான் பூமி வடிவினர். இந்த இருவருமே மண்ணாகி, விண்ணாகி அன்பர்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

தில்லையிலும் திருவாரூரிலும் மூல லிங்கத்துக்கு மூலட்டானேஸ்வரர் என்றே பெயர். இரு இடங்களிலுமே பதஞ்சலி, வியாக்ரபாதர் ஆகிய இருவரும் பாத தரிசனம் கண்டுள்ளனர். தில்லையிலே பெருமானின் 'அதிர வீசி ஆடத் தூக்கிய' இடப் பாத தரிசனம் கண்டு மகிழ்ந்து, மார்கழித் திருவாதிரை நாளில் பேறு பெற்றனர். பின்னர் இருவரும் திருவாரூர் வந்து, இறைவனின் 'இருந்தாடும்கூத்து' கண்டு பங்குனி உத்திர நாளில் வலப் பாத தரிசனம் பெற்றனர்.

திருவாரூரில் கமலாம்பிகை, நீலோற்பலாம்பிகை என இரு பெருந்தேவியர். தில்லையில் சிவகாமி, மூலட்டானநாயகி என இரு தேவியர்.

தில்லை நடராஜர் திருவாரூர் தியாகராஜர் இரு ராஜாக்களுமே அடியவர்கள் பாட அடியெடுத்துக் கொடுத்தவர்கள். திருவாரூர் பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு, 'தில்லை வாழ் அந்தணர்' என்று அடி யெடுத்துக் கொடுத்தார். பெரிய புராணம் பாட, 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தார் தில்லைப் பெருமான்.

திருவாரூர் பெருமான், ' தில்லை ' என்ற முதலடியைக் கொடுத்து சிதம்பரத்தை நினைவு படுத்துகிறார். தில்லைக் கூத்தனோ, உலகம் என்று அடியெடுத்து ' மண் தத்துவமான' திருவாரூரை நினைவுபடுத்துகிறார். ஓம் சிவாய நம ஓம்.



# தண்ணீரில் அடுப்பு எரியும் அரிய கண்டுபிடிப்பு!

தமிழகத்தைச் சேர்ந்த பேலூர் ராமலிங்கம் கார்த்திக். சேலம் மாவட்டம் பேலூரைச் சேர்ந்த இவர் தண்ணீரில் இருந்து ஹைட்ரஜனைப் பிரித்து எடுத்து அதன் மூலம் எரிசக்தியை உருவாக்கி அதனை சாத்தியப்படுத்தியும் சாதனை படைத்திருக்கிறார். 20 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் முடிவில் நீரை எரிபொருளாக மாற்றி அதன் மூலம் கேஸ் அடுப்பு மற்றுமின்றி வாகனங்கள் மற்றும் ஜெனரேட்டர் வரை இயக்குவதற்கான சூழலை உருவாக்கியுள்ளார்.

தன்னுடைய தனித்துவமிக்கப் படைப்பு குறித்து மத்திய அரசிடம் அனுமதி கோரியிருப்பதாகவும், மத்திய அரசின் உரிமம் கிடைக்கப்பெறும் பட்சத்தில் ஜனவரி முதல் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்றும் ராமலிங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்

ராமலிங்கம் கார்த்திக் கண்டுபிடிப்பிற்குப் பின்னணியில் திரைப்பட நடிகரும், பாஜகவின் நிர்வாகியுமான சரத்குமாரின் பங்களிப்பும் உள்ளது. நீரில் இருந்து எரிசக்தி தயாரிக்கும் நிறுவனத்தின் செயல் இயக்குனராக இருக்கும் சரத்குமார், ராமலிங்கத்தின் படைப்பு குறித்தும் அதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறித்தும் மத்திய அரசு அதிகாரிகளிடம் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைத்துள்ளார். உலகளவில் பொருளாதாரத்தில் நான்காவது நாடாக இருக்கும் இந்தியா, இக்கண்டுபிடிப்பு மக்கள் பயன்பாட்டிற்கு வந்தால் மேலும் முன்னேற்றம் அடையும் எனவும் அவர்த் தெரிவித்தார்.

பற்றி எரியும் நெருப்பை அணைக்கப் பயன்படுத்தப்படும் நீரில் இருந்தே நெருப்பை உற்பத்தி செய்யும் இந்த ஆராய்ச்சி உலகச் சந்தையை பொருளாதார அளவில் மாற்றியமைக்கும் சக்தியாகக் கருதப்படுகிறது.

உலக நாடுகளின் கவனம் அனைத்தும் ஹைட்ரஜன் பக்கம் அண்மைக்காலமாகத் திரும்பிய நிலையில், அதிலிருந்தே எரிசக்தியை உருவாக்கியிருக்கும் ராமலிங்கம் கார்த்திக்கின் முயற்சி மிகுந்த பாராட்டுதலுக்குரியது.

# நாணயஸ்தன்

முன்னொரு காலத்தில் குருவாயூரப்பன் என்னும் வணிகன் வாழ்ந்து வந்தான். அவன் ஊர் ஊராகச் சென்று பழைய ஈயம், பித்தளைப் பொருட்களை வாங்கி, நகரத்தில் உள்ள மொத்தக் கடைகளில் விற்று பணம் பெற்றுக் கொள்வான். அவன் செல்லும் இடங்கள் பெரும்பாலும் கிராமங்களாக இருந்ததால், பொருட்கள் கிடைப்பது கடினமாக இருந்தது. இருப்பினும், அவனது வாழ்க்கையும் வறுமையில் தான் ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு முறை, பக்கத்து ஊரில் உள்ள ஒரு வீட்டிற்குச் சென்று, பழைய பொருட்கள் ஏதேனும் இருக்கிறதா எனக் கேட்டான். அந்த வீடு ஒரு காலத்தில் செல்வத்துடன் வாழ்ந்தவர்களுடையது. ஆனால், இப்போது அவர்களது செல்வம் கரைந்து, இரு குழந்தைகளுடன் ஒரு தாய் வறுமையில் வாழ்ந்து வந்தாள். அந்தத் தாய், வீட்டில் உள்ள பழைய பொருட்களை விற்று, அதன் வருமானத்திலேயே வாழ்க்கையை நடத்தி வந்தாள்.

அந்தப் பெண், குருவாயூரப்பனிடம் பழைய பொருட்களை விற்று, அவன் நாணயமாகக் கொடுக்கும் பணத்தைக் கொண்டு தன் குடும்பத்தை நடத்தி வந்தாள. குருவாயூரப்பனுக்கு இது மனதுக்கு கஷ்டமாக இருந்தாலும், அவனும் அவர்கள் கொடுக்கும் பழைய பொருட்களை விற்றுத் தான் வாழ வேண்டியிருந்தது.

ஒரு நாள், அந்த வீட்டிற்குச் சென்று, பழைய பொருட்கள் ஏதேனும் இருக்கிறதா எனக் கேட்டான். அந்தப் பெண் பரிதாபமாகப் பார்த்து, "என்னிடம் இப்போது ஒன்றுமே இல்லை. ஒரு காலத்தில் எங்க தாத்தா சாப்பிட்ட பழைய சாப்பாட்டுத் தட்டு



ஒன்று இருக்கு. ஆனால், அது வளைந்து நெளிந்து கிடக்கு. அதை எடுத்துக்கொண்டு, எங்களுக்கு ஏதாவது கொடுத்துட்டுப் போ. இரண்டு நாள் சாப்பாட்டுக்கு நிம்மதியாக இருக்கலாம்," என்று வருத்தத்துடன் சொல்லி, அந்தத் தட்டைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

குருவாயூரப்பன் அந்தத் தட்டை வாங்கிப் பார்த்தான். அது மிகவும் பழையதாகவும், அழுக்காகவும் இருந்தது. அதை நன்கு துடைத்துப் பார்த்தான். மதிப்பு எவ்வளவு இருக்கும் என யோசித்தவன், மீண்டும் மீண்டும் துடைத்துப் பார்த்தான். அவன் இப்படி துடைத்து யோசிப்பதைப் பார்த்த அந்தப் பெண், "தம்பி, இந்தத் தட்டு உனக்கு எதுக்கும் உதவாது என்றாலும், எங்களுக்கு உதவி செய்யறதுக்காகவாவது ஏதாவது கொடுத்துட்டுப் போ," என்று பரிதாபமாகச் சொன்னாள்.

குருவாயூரப்பன், "அம்மா, இப்போதைக்கு என்னால் எதுவும் சொல்ல முடியாது. என் கையில் கொஞ்சம் பணம் இருக்கு, இந்தாங்க," என்று அவள் கையில் கொடுத்தான். அந்தப் பணம் அவளுக்கு அதிகமாகத் தோன்ற, "தம்பி, இதுவே அதிகம்," என்று மனநிறைவுடன் பெற்றுக் கொண்டாள்.

குருவாயூரப்பன் எதுவும் பேசாமல் நகரத்துக்கு விரைந்தான். அங்கு, அவனுக்கு நன்கு தெரிந்த ஒரு நகை ஆசாரியிடம் சென்று, அந்தத் தட்டைக் காண்பித்தான். ஆசாரி அதைப் பார்த்து, "அப்பா... இது சுத்த தங்கம்!" என்று வாயைப் பிளந்தார். இருவரும் ஒரு பெரிய நகைக் கடைக்குச் சென்று, தட்டைக் காண்பித்து, அந்தக் குடும்பத்தின் விவரங்களையும் குருவாயூரப்பன் விளக்கினான்.

நகைக் கடைக்காரர், அந்தப் பெண்ணையும் குழந்தைகளையும் அழைத்து வரச் சொன்னார். வாகன வசதியும் ஏற்பாடு செய்து கொடுத்தார். குருவாயூரப்பன் விரைந்து சென்று, அந்தப் பெண்ணையும் அவர்கள் குழந்தைகளையும் கூட்டி வந்தான்.

நகைக் கடைக்காரர் அந்தப் பெண்ணிடம், "அம்மா, இந்தத் தட்டு மாதிரி வேறு ஏதாவது உங்க கிட்டே இருக்கா?" என்று கேட்டார். "இல்லை, ஐயா. இது எங்கேயோ கிடந்தது. நான்தான் பொறுக்கி எடுத்து வைத்து இவரிடம் கொடுத்தேன்," என்றாள் அந்தப் பெண்.

"அம்மா, இது சுத்த தங்கம். இதன் மதிப்பு ஐந்து லட்ச ரூபாய்க்கு இருக்கு. பணமாகக் கொடுத்துடவா?" என்று கேட்டார்.

அந்தப் பெண், குருவாயூரப்பனைப் பார்த்து, "தம்பி, நீதான் என்ன செய்யணும்னு சொல்லணும்," என்றாள்.

குருவாயூரப்பன், "ஐயா, இந்தப் பணத்தை பேங்கில் டெபாசிட் செய்து கொடுங்க. அதுல இருந்து மாசாமாசம் வட்டி வரும். அதை வைத்து இவங்க வாழ்க்கையை நடத்துவாங்க," என்று சொன்னான்.



நகைக் கடைக்காரர், குருவாயூரப்பனை கட்டிப்பிடித்து, "உன்னை மாதிரி நாணயஸ்தன் எங்கேயும் கிடைக்க மாட்டான்," என்று சொல்லி, மேனேஜரை அழைத்து, பக்கத்தில் உள்ள வங்கியில் எல்லா ஏற்பாடுகளையும் செய்யச் சொன்னார்.


பின்னர், குருவாயூரப்பனையும் ஆசாரியையும் அழைத்து, "தம்பி, இந்தாங்க, என்னால் முடிந்த அன்பு பரிசு," என்று கொஞ்சம் பணம் கொடுத்தார். குருவாயூரப்பன் மறுத்து, "இல்லை, ஐயா, இந்தப் பொருள் என்னுடையது இல்லையே," என்றான். அதற்கு நகைக் கடைக்காரர், "தம்பி, நான் கொடுத்தது பொருளுக்காக இல்லை, உன் நாணயத்துக்கு. நீ நினைச்சிருந்தா இது உன்னுடையதுன்னு சொல்லி பணத்தை வாங்கியிருக்கலாம். ஆனா, நீ அந்தக் குடும்பத்தை கூட்டி வந்து, அவங்களுக்கு ஒரு வருமானத்துக்கு வழி காட்டியிருக்கியே, அதுக்குத்தான்," என்றார்.

குருவாயூரப்பன் நன்றி கூறி, அந்தத் தொகையைப் பெற்று, அங்கிருந்து விடைபெற்றான்.

குருவாயூரப்பன் ஏழை வணிகனாக இருந்தாலும், நாணயஸ்தனாக இருந்ததால், அவனுக்கு புகழும், பெருமையும், செல்வமும் கிடைத்ததல்லவா!

**- பொள்ளாச்சி முத்துராஜ்**

# மூழ்கிய டைட்டானிக் கப்பல் அருகில் மூன்று கப்பல்கள் !



டைட்டானிக்கப்பல்மூழ்கியபோது அதனருகில் மூன்று கப்பல்கள் இருந்தனவாம். அதில் ஒரு கப்பலின் பெயர் சாம்சன். அது டைட்டானிக் மூழ்கிக் கொண்டிருந்த இடத்திலிருந்து 7 கி.மீ தொலைவில் இருந்ததாம். டைட்டானிக் அனுப்பிய “காப்பாற்றுங்கள்: என்கிற சமிக்ஞை காட்டும் வெள்ளை விளக்கொளியை பார்த்தனர். ஆனால் அதில் இருந்தவர்கள், சீல் எனும் கடல் விலங்கைத் திருட வந்தவர்கள். அதனால் காப்பாற்றப்போய் மாட்டிக் கொண்டால் என்னாவது, நமக்கேன் வம்பு என்று எண்ணி டைட்டானிக்கின் எதிர்த்திசையில் விரைந்து விட்டனர்.

நம்மில் பலர், நமது பாவச்செயல்களில் மட்டுமே கவனம் செலுத்தி அடுத்தவரின் துன்பங்களைப் பற்றித் துளியும் கவலை படாமல் இருப்போம். இந்த சாம்சன் கப்பல் போல.

அடுத்து கலிஃபோர்னியன் என்ற கப்பல், டைட்டானிக் கப்பலிற்கு 14 கி.மீ தொலைவில் இருந்தது. அக்கப்பலின் கேப்டனும் டைட்டானிக் அனுப்பிய ஆபத்து சமிக்ஞைகளைப் பார்த்தார். ஆனால் அவர்களின் கப்பலைச் சுற்றியும் பனிப்பாறைகள் இருந்தன. இருட்டாகவும், மோசமான சூழலும் இருந்ததால், திரும்பவும் கரைக்கே போய், காலையில் புறப்படலாம் என முடிவெடுத்தனர் மாலுமிகள். உதவி கோரிய கப்பலுக்கு ஒன்றும் ஆயிருக்காது என்று அவர்களே, அவர்களுக்குக் கூறித்தேற்றிக் கொண்டனர்.



எஸ்.சூர்யா

இக்கப்பலைப் போன்றவர்கள் நம்மிடையே இருக்கும்,”நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. சூழல், சரியில்லை, நிலைமை சரியானதும் பார்த்துக்கொள்ளலாம்' என்று எண்ணுபவர்கள்.

மூன்றாவது கப்பல் கர்ப்பாதியா. அது, டைட்டானிக் கிலிருந்து 58 கி.மீ தொலைவில் தெற்கு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தது. அப்போது கப்பலின் கேப்டனுக்கு டைட்டானிக் அனுப்பிய ஆபத்து சமிக்ஞை ரேடியோ மூலம் கேட்டது. அவர் உடனே, மண்டியிட்டு இறைவனிடம் 'எனக்கு வழிகாட்டு' எனப் பிரார்த்தனை செய்து, கப்பலைத்திருப்பி, டைட்டானிக்கை நோக்கி, ஆபத்தான பனிப்பாறைகளிடையே செலுத்தினார். இந்தக் கப்பல்தான் டைட்டானிக்கில் சிக்கியிருந்த 705 பேரைக் காப்பாற்றியது

தடைகளும், எதிர்ப்புகளும், ஆபத்துகளும், பொறுப்பைத்தட்டிக் கழித்திட காரணங்களும் நிச்சயம் குறுக்கிடும், ஆனால் அவற்றை மீறிச் செல்பவர்கள் மட்டுமே உலகில் உள்ள மக்களின் இதயங்களில் நாயகர்களாக வாழ்வார்கள்.



# அறிவியல் வளர்ச்சியும் அதிசய குழந்தையும்!

ஒரு பெண்ணுக்கு பிரசவம் நடக்கும் போது அது அவளுக்கு மறுபிறவி என்று சொல்வார்கள் காரணம் மரணத்தின் விளிம்புக்கே சென்று அந்த குழந்தையை அவர் பெற்று வருவாள் என்பதற்காக அதை சொன்னார்கள் ஆனால் செக்கோஸ்லோவியா நாட்டில் மூளை சாவு அடைந்த ஒரு பெண்ணுக்கு 117 நாட்கள் கடந்து பிரசவத்தை பார்த்து குழந்தையை பத்திரமாக கொண்டு வந்து இருக்கிறது அறிவியல் அதிசயம்!

தாய் மரணம் அடைந்து 117 நாட்கள் கழிந்து பிறந்த குழந்தை..

கர்ப்பிணி பெண் ஒருவர் மரணம் அடைந்து 117 நாட்கள் கழித்து அவரது வயிற்றில் உள்ள குழந்தை பிறந்த அதிசய நிகழ்வு ஒன்று செக் குடியரசு நாட்டில் நடந்துள்ளது

செக் குடியரசு நாட்டில் 15 வார கர்ப்பமாக இருந்த 27 வயது பெண் ஒருவர் திடீரென மூளைச் சாவு அடைந்தார். இதனையடுத்து அவரது வயிற்றில் உள்ள சிசுவை காப்பாற்ற மருத்துவர்கள் முடிவு செய்தனர். அந்த வகையில், பல்வேறு செயற்கை உபகரணங்களுடன் இறந்த கர்ப்பிணி பெண்ணுக்கு தீவிர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. சுகப்பிரசவத்திற்கு உதவும் வகையில், எந்திர வசதிகள் கொண்டு அப்பெண்ணின் கால்களுக்கு நடைப்பயிற்சி உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டது

இதேபோல் மருத்துவர்களின் கண்காணிப்பில் சுமார் 117 நாட்கள் சிகிச்சை பெற்று வந்த நிலையில், இன்று அந்த பெண்ணின் வயிற்றில் இருந்து குழந்தை பிறந்துள்ளது. அறுவை சிகிச்சை மூலம் 2.13 கிலோ எடையுடன் பிறந்த பெண் குழந்தை அப்பெண்ணின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. குழந்தை பிறந்தவுடன் அந்த பெண்ணுக்கு அளிக்கப்பட்டு வந்த செயற்கை சுவாச கருவிகள் உள்ளிட்டவை அகற்றப்பட்டதால் அவர் மீண்டும் மரணம் அடைந்தார். தாய் இறந்து 117 நாட்கள் குழந்தை பிறந்த அதிசயம் செக் குடியரசு நாட்டையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# குழந்தை வளர்ப்பில் பெற்றோர் கவனிக்க வேண்டியவை!

குழந்தை வளர்ப்பு முறையில் ஆண், பெண் என எந்தப் பேதமும் கிடையாது. ஆண் குழந்தைக்கும் நல்ல வளர்ப்பு (Good parenting) தேவைப்படுகிறது.

ஒழுக்கம் என்பது 15 வயதில் சொல்லிக்கொடுப்பது அல்ல, குழந்தைப் பருவத்திலேயே சொல்லித்தரப்படுவது.

குழந்தை வளர்ப்பில் ஆண், பெண் இருவரின் தேவையும் இருக்கிறது என்பதால்தான் காதல் என்ற உணர்வும் திருமணம் என்ற பந்தமும் அவசியமாக இருக்கின்றன. காரணம், குழந்தைகள் மற்றவர்களைச் சார்ந்தே வளர்கின்றன. குழந்தையைப் பேணி வளர்ப்பதுதான் குழந்தை வளர்ப்பில் அம்மாவின் பங்கு;உலக விஷயங்களைச் சொல்லித்தர வேண்டியது அப்பாவின் பங்கு.

தன்னை உதாரணமாகத் தன் மகன் பின்பற்றுவான் என்பதை அறிந்து மனைவியிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும், பிற பெண்களிடம் எப்படிப் பழக வேண்டும், என்ன ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கிறோம் என்பது போன்ற விஷயங்களில் தந்தைகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வளரிளம் பருவத்தில் ஆண் குழந்தைக்கு 'டெஸ்டோஸ்டீரான்' என்ற பாலியல் ஹார்மோன் அளவுக்கு அதிகமாகச் சுரக்கும். அந்தச் சமயத்தில் தசைகள் அடர்த்தியாவது, ரத்த அணுக்கள் அதிகரிப்பது போன்ற உடல் ரீதியான மாற்றங்கள் ஏற்படும். அதேபோன்று மனரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் பல மாற்றங்கள் உருவாகும். அதிகமாக பாலியல் வேட்கை தூண்டப்படும். 24 மணி நேரமும் அதைப்பற்றி மட்டுமே சிந்திக்கும் தன்மைகூட ஏற்படும். அது ஓர் ஆண் குழந்தையின் ஒழுக்கக்கேடு என்று எடுத்து கொள்ள கூடாது. அது டெஸ்டோஸ்டீரான் ஹார்மோனின் தன்மை. அதனால், வளரிளம் பருவத்தில் அன்பு மட்டும் போதாது; அதிகமான கண்டிப்பும் இருக்க வேண்டும். ஆண் குழந்தைகளின் எல்லைகளைத் தீர்மானிக்கும் ஆளுமை மிகுந்த தலைவரும் அந்தச் சமயத்தில் தேவைப்படுகிறார். அதனால்தான், குழந்தை வளர்ப்பில் அப்பாவின் பங்கு மிகவும் முக்கியமானது.


ஆண் குழந்தைகள் பருவமடைந்ததும் வெறுமனே பாலியல் நாட்டத்தில் அவர்கள் மூழ்கிவிடாமல், பல்வேறு கவனச்சிதறல்களை நாம் உருவாக்க வேண்டும். அந்த நேரங்களில் அவர்களுக்குப் பிடித்தமான விளையாட்டுகள், திறன் வளர்ப்புகள், சமூகச் சேவை என மற்ற விஷயங்களில் ஈடுபடுத்தினால் பாலியல் ரீதியான இச்சைகளிலிருந்து அவர்களைத் திசை திருப்ப முடியும். இந்த விஷயத்தில் கவனம் செலுத்தாமல், அந்த நேரத்தில் ஆண் குழந்தைக்கென்று ஒரு தனி அறையைக் கொடுத்து அவர்களைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் முழுநேரமும் கலவியைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு தன்னையும் தன் உடலையும் வருத்தி, பெற்றோருக்கும் கஷ்டம் கொடுத்து விடுவார்கள்.

வளரிளம் பருவத்தில் இருக்கும் ஆண் குழந்தைக்குத் தனியறை அல்லது தனியாக பூட்டிக்கொண்டு இருக்கும் சுதந்திரம், உடல் உழைப்பைச் செலுத்தாமல் சொகுசாக வாழ்வதற்கான வழிவகைகளைச் செய்து கொடுப்பதுதான் ஒரு பெற்றோர் அவனுக்குச் செய்யும் மிகப்பெரிய துரோகமாக இருக்கும். ஆற்றலை ஒட்டு மொத்தமாகச் செலவழிக்கும் வேலைகளில் ஈடுபடுத்திக்கொண்டே இருக்க வேண்டும். பெற்றோரின் கவனமும் முழுக்க முழுக்க அந்தக் குழந்தையின் மீது இருக்க வேண்டும்.

நம் குழந்தைதானே என்று அம்மாவும் அவர்களின் முன்பாக நின்று ஆடை மாற்றுவது, ஆடை மாற்றுவதற்கு தனக்கு உதவி செய்யுமாறு கூறுவது எல்லாம் மிகவும் தவறான விஷயம்.

அப்பாக்கள் செய்கிற பெரிய தவறு ஆண் குழந்தைகளைச் சுதந்திரமாக விட்டுவிடுவது; அல்லது அதிக கெடுபிடி!






**பெ**ருமாள் கோயில் போயிட்டு வரேன் என்று சொல்லி லட்டு கொடுத்தார் கபாலி கான். திருப்பதியா என்று கேட்டோம் இல்ல பக்கத்தில் உள்ள பெருமாள் கோயில் இன்றைக்கு சனிக்கிழமை இல்லையா என்று கேட்டார். அதுக்கு புரட்டாசி மாசம் சனிக்கிழமை விசேஷம் என்றால் அரசியல் விசேஷம் சனிக்கிழமை வரும் மக்களை சந்திக்கும் விஜய் பற்றி என்றார்.

ஏலக்காய் டீ கொடுத்தோம். வாங்கி குடித்துக் கொண்டே செய்திகளை சொல்ல ஆரம்பித்தார்.

விஜய் படிப்படியாக அரசியலில் ஒவ்வொரு அடியாக எடுத்து வருகிறார் அந்த வகையில் பொதுமக்களை சந்திக்கின்ற சுற்றுப் பயணத்தை 13ந்தேதி சனிக்கிழமை தொடங்கி வாரந்தோறும் நடத்தி வருகிறார்.

திருச்சி அரியலூர் மாவட்டங்களில் பங்குபெற்று அடுத்த சனிக்கிழமை 20ஆம் தேதி நாகை, திருவாரூர் மாவட்டம் சென்று மக்களை சந்தித்தார்.



இனி வாரந்தோறும் விஜயின் ஆரவாரம் ஆரம்பம் என்று அவரது ரசிகர்கள் உற்சாகத்தில் துள்ளி குதிக்கிறார்கள்.

**ரசிகர்களா? தொண்டர்களா?**

ரசிகர்கள் தொண்டர்களாக முழுமையாக மாற வில்லை. அப்படி மாற்றுவதற்கான முயற்சியை விஜய் எடுக்கவே இல்லை என்றே தோன்றுகிறது

**எப்படி சொல்லுகிறீர்கள்?**

அவ திரைப்படங்களை நடிக்கும் போது சிறப்பான இயக்குனர், பிரம்மாண்ட தயாரிப்பாளர், இவர்களின் உதவியால் பல வெற்றிப் படங்களை கொடுத்தார்.


**ஆனால் அரசியலில் என்ன ஆச்சு?**

அரசியலில் அவருக்கு சரியான வழிகாட்டுதல் இல்லை என்பது அவரிடம் சென்று திரும்பிய சில ஊடகவியலாளர்கள் தெரிவித்ததில் இருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

திரு .அய்யநாதன் திரு. ஜெகதீஸ்வரன் போன்றவர்கள் தாங்கள் விஜய் மாற்றத்துக்கானவர் என்று நம்பி அவர் பின்னால் சென்றது உண்மை ஆனால் அவரை தங்கள் இஷ்டப்படி தான் நடத்த வேண்டும் என்று உடன் இருப்பவர்கள் நினைக்கிறார்கள். அதனால் அவர் எடுக்கும் எல்லா முயற்சிகளும் மக்கள் மத்தியில் சரியாக சென்று அடையாமல் பார்த்துக் கொள்வதில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெறுகிறார்கள்.

**கூட்டம் கூடுகிறதே?**

கூட்டத்துக்கு குறைவில்லை. ஆனால் அவர் பொதுவெளியில் பேசுகிறபோது அவருக்கு எழுதி தருகின்ற தகவல்களை பற்றி முழுமையாக அவர் அறியாததால் அவர்





பேச்சுக்கு எதிர்வினை ஆற்றப்படுகிறது.

**எப்படி சொல்கிறீர்கள்?**

*1967 அண்ணா 1977 எம்ஜிஆர் 2026 விஜய் என்று அவர் சொன்னதை விமர்சிக்கிறார்கள்.*

**அவரது வருகை எரிச்சல் ஊட்டுகிறதோ?**

அரசியல் கட்சிகள் அவரைப் பற்றி ஒவ்வொருவரும் ஒரு நிலைப்பாடு எடுத்து வருகிறார்கள். அவர் என்னதான் கொள்கை எதிரி பாஜக என்று சொன்னாலும் மத்திய அரசின் தவறுகளை சுட்டிக்காட்டுவதில்லை முழுக்க முழுக்க திமுகவை எதிர்ப்பது மட்டுமே தன்னுடைய வாழ்நாள் லட்சியம் என்பது போல பேசி வருகிறார். ஆனால் திமுக அவரைக் கண்டு கொள்வதே இல்லை யாரேனும் எப்போதாவது ஒருமுறை அவரை பதில் சொல்கிறேன் என்று விமர்சிக்கிறார்கள் மற்றபடி..

**மற்ற கட்சிகள்?**

அ.தி.மு.க, பா.ஜ.க எப்படியாவது [illegible]





வந்து விடலாம் என்பதால் அவர்கள் அதிகம் விமர்சிப்பதில்லை. youtubeபர்கள் நிறைய பேர் அவரை விமர்சித்தாலும் ஒரே ஒரு அரசியல் கட்சி மட்டும் மூர்க்கமாக இருக்கிறது.

**எந்த கட்சி?**

நாம் தமிழர் கட்சி சீமான். இரண்டு வருடங்களுக்கு முன்பு தம்பி விஜய் அரசியலுக்கு வருவது பெரிய பலம் என்று சொன்னது இப்போது அப்படியே தலைகீழாக உள்ளது.

**என்னாச்சு?**

வாடா போடா என்று நேரடியாக திட்டுகிற அளவுக்கு வளர்ந்து இருக்கிறது. ஆனால் விஜய் அவர் குறித்து பேசுவதே இல்லை இப்போதைக்கு பரபரப்பான அரசியல்களும் விஜய் சீமான் இருவரைச் சுற்றி வருகிறது. அடுத்த மாதம் நிலவரம் என்னவென்று பார்ப்போம் வரட்டுமா என்று சொல்லி வெளியேறினார் கபாலி கான்.

# வான் மேகங்களை பற்றி தெரியாத செய்திகள்!



**உ**ண்மையில் சாதாரண மேகங்கள் முதல் கருமையான மேகங்கள் வரை ஒவ்வொரு மேகத்திற்கும் ஒரு அசாதாரணமான எடை உண்டு.

படத்திலுள்ள இந்த மேகத்தை எடுத்துக் கொண்டாலும், இதன் எடை சுமார் 10 லட்சம் கிலோ எடை இருக்கும். அதாவது, கிட்டத்தட்ட 400 யானைகளின் எடைக்கு சமமாக இருக்கும்.

படத்திலுள்ள இந்த மேகத்தை எடுத்துக் கொண்டாலும், இதன் எடை சுமார் 10 லட்சம் கிலோ எடை இருக்கும். அதாவது, கிட்டத்தட்ட 400 யானைகளின் எடைக்கு சமமாக இருக்கும்.

ஏனெனில், மேகங்கள் அனைத்தும் பஞ்சு மாதிரியான பொருட்கள் அல்ல. நாம் விண்ணில் பார்க்கும் அனைத்து மேகங்களிலும் தண்ணீர் துளிகள் உள்ளன. இவை ஒன்று, இரண்டல்ல.....பல பில்லியன் எண்ணிக்கையில் துளிகள் உள்ளன. இவை தான் எடையை கூட்டுகின்றன.

மேகங்கள் எப்படி இவ்வளவு எடையிலும் மிதக்கின்றன...?

ஒரு விமானம், ஒரு மேகம்....இவை இரண்டும் எப்படி பறக்கின்றன?

விமானம் செயற்கையாக என்ஜின்கள் மூலம் காற்றை உள்ளே இழுத்து வெளியே விடும்போது அதற்கு ஒரு thrust கிடைக்கும். அதனால் அது காற்றில் 'பறக்கிறது.

ஆனால், மேகத்திற்கு எவ்விதமான செயற்கை சக்தியும் கிடையாது. மேகத்தில் இருக்கும் ஒவ்வொரு தண்ணீர் துளியும் 0.01 மிமீ பரப்பளவு மட்டுமே கொண்டுருக்கும். இவை பல பில்லியன் எண்ணிக்கையில் பெரிய குடையாக படர்ந்து இருக்கும். இதற்கு கீழே உள்ள காற்று அதனை கீழே விழ விடாது. இந்த மேகம் 'மிதக்கும் (Floating)'. உதாரணமாக, ஒருவர் குளத்தில் நீச்சல் அடிக்கும்போது கை கால்களை அசைக்கவும், உந்தவும் வேண்டும். அப்போது தான் அவர் தண்ணீரில் நீந்த செல்ல முடியும். இங்கே அந்த நபர் தான் விமானம்.

தண்ணீர் மேல் நுரை(Foam) விழுந்தால், அவை தண்ணீரில் மூழ்காது + அதுவாகவே நீந்தாது. ஆனால்,கீழே உள்ள தண்ணீர் செல்லும் திசையில் அந்த நுரை செல்லும். இங்கு நுரை தான் மேகம். தண்ணீர் தான் காற்று.

இப்போது நல்ல மிதமான காற்று வீசும்போது மேகங்கள் ஒன்றுடன் ஒன்று இணையும். அப்போது தண்ணீர் துளிகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டு சேர்ந்துக் கொள்ளும்.சில மேகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டு, தண்ணீர் துளிகள் சேர்ந்துக் கொண்டு அடர்த்தி ஆகிவிடும். இந்த மேகத்திற்குள் சூரிய ஒளியால் நுழைந்து மறுபுறம் வெளியேற இயலாது.

எனவே, இந்த மேகத்தின் மேற்புறம் சூரிய ஒளி அடிப்பதால் வெள்ளையாக இருக்கும்(நமக்கு தெரியாது). ஆனால், கீழ்புறத்தின் வழியாக சூரிய ஒளி வெளியேற முடியாத காரணத்தினால், அவை கருமையாக நமக்கு தெரிகின்றன.

# உயிரைக் கொல்லும் செல்பி மோகம்!



ஒரு சட்ட நிறுவனம் நடத்திய ஆய்வின்படி, 2014 முதல் 2025 மே மாதம் வரை ஏற்பட்ட செல்ஃபி மோக உயிரிழப்புகள் மற்றும் விபத்துகளில், இந்தியாவில் தான் உலகிலேயே அதிக அளவில் நிகழ்ந்துள்ளன. அமெரிக்காவின் 'தி பார்பர்' சட்ட நிறுவனம் நடத்திய இந்த ஆய்வில், இந்தியாவில் மட்டும் இந்த காலகட்டத்தில் 271 விபத்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 214 பேர் உயிரிழந்துள்ளனர். அதிக மக்கள் தொகை, ஆபத்தான இடங்களுக்குச் செல்வது, சமூக வலைதளங்களின் தாக்கம் போன்றவை இதற்குக் காரணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இரண்டாம் இடத்தில் அமெரிக்காவும் ரஷ்யா மூன்றாவது இடத்திலும் உள்ளது. இந்த நாட்டில் 18 பேர் உயிரிழந்தனர் மற்றும் ஒருவர் காயமடைந்துள்ளார். அதேபோல், பாகிஸ்தான் நான்காவது இடத்தில் உள்ளது. அங்கு செல்ஃபி தொடர்பான சம்பவங்களில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து ஆஸ்திரேலியா 5வது இடத்தில் உள்ளது. அங்கு மொத்தம் 15 செல்ஃபி தொடர்பான சம்பவங்கள் நடந்துள்ளன. அதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் 2 பேர் காயமடைந்துள்ளனர்.

அதிக மக்கள் தொகை காரணமாக, ஆபத்துகள் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

ரயில் தண்டவாளங்கள், பாறைகள் போன்ற ஆபத்தான இடங்களுக்குச் சென்று செல்ஃபி எடுப்பது விபத்துகளுக்கு வழிவகுக்கிறது.

சமூக வலைத்தளங்களில் லைக்குகளைப் பெறுவதற்காகப் பலர் செல்ஃபி எடுக்கும் ஆர்வத்தினால் உயிரைப் பணயம் வைக்கின்றனர்.பெண்கள் கூட உயிருக்கு கொஞ்சமும் பயப்படாமல் இந்த செல்பி எடுத்து உயிர் எடுப்பது கொடுமையிலும் கொடுமை. சமீபத்தில்

கர்நாடக மாநிலத்தில் நடந்த சம்பவம் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. பெங்களூரு பரப்பன அக்ரஹாரா போலீஸ் எல்லைக்கு உட்பட்ட சூடசந்திரா பகுதியை சேர்ந்தவர் நந்தினி (வயது 23). ஆந்திராவை சேர்ந்த இவர் சூடசந்திராவில் பெற்றோருடன் வசித்து வந்தார். சம்பவத்தன்று இவரது வீட்டின் அருகே புதிதாக கட்டப்பட்டு வரும் ஒரு கட்டிடத்துக்கு தோழிகளுடன் சென்றிருந்தார்.

அப்போது அந்த கட்டிடத்தின் 13வது மாடிக்கு சென்ற நந்தினி, அங்கிருந்து செல்போனில் 'செல்பி' புகைப்படம் எடுக்க முயன்றார். அதாவது அந்த கட்டிடத்தில் தடுப்புச்சுவர் இல்லை. அவர் 13வது மாடி கட்டிடத்தின் விளிம்பில் நின்று 'செல்பி' படம் எடுத்துள்ளார். அப்போது எதிர்பாராதவிதமாக திடீரென்று 13வது மாடியில் இருந்து நந்தினி கால் தவறி கீழே தரையில் விழுந்தார்.

இதில் மண்டை உடைந்து ரத்த வெள்ளத்தில் நந்தினி சம்பவ இடத்திலேயே பலியானார்.எனவே செல்பி மோகத்தை கட்டுப்படுத்துவோம் ஆபத்தான செயலில் ஈடுபட வேண்டாம் என்ற எண்ணம் அனைவருக்கும் வரவேண்டும்.

# சிற்பி சிலையை மட்டுமே செதுக்க வேண்டும்!

**எ**ந்த வேலையும் கேவலம் இல்லை.

சிலவற்றை தெரிந்து கொண்டால் தான் நம்மால் தெளிவாக இருக்க முடியும். சிலவற்றை தெரிந்து கொள்ளாமல் இருந்தால் தான் நிம்மதியாக இருக்க முடியும்.

ஒரே நேரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட வேலைகளைச் செய்யும் கலையைக் கற்றுக்கொண்டு விட்டோம்

என்பதற்காக எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கொண்டு அவதிப்பட வேண்டும் என்று பொருளல்ல.

நமக்குரிய வேலையைத்தான் நாம் செய்யவேண்டும். ஒரு பதிப்பாளர் புத்தகங்களைப் பார்சல் கட்டிக்கொண்டிருந்தார். "என்ன சார், பார்சல் கட்டிக்கிட்டிருக்கீங்க" என்று கேட்டேன் அவருக்கு 'சுர்' என்று கோபம் ஏறிவிட்டது. இதை நான் எதிர்பார்க்கவில்லை.

"டிக்னிட்டி ஆஃப் லேபர்னா என்னன்னு உங்களுக்குத் தெரியுமா எந்த வேலையும் கேவலம் இல்லை. நான் இந்த விஷயத்திலெல்லாம் கௌரவம் பார்ப்பது கிடையாது. எந்த வேலைன்னாலும் இழுத்துப் போட்டுக்கொண்டு பார்ப்பேன் தெரியுமா? பார்சல் கட்டுவது ஒண்ணும் இளக்காரமில்லை" என்று பொரிந்து தள்ளிவிட்டார் மனிதர்.

எனக்கு முகத்தை எப்படி வைத்துக்கொள்வது என்றே பிடிபடாமல் போய்விட்டது. மனுஷர் ரொம்ப சூடாயிட்டார். இப்போது ஏதும் பேசினால், நாம் சொல்வது எடுபடாது என்கிற முடிவுக்கு வந்தேன்.

ஆனால், நான் அக்கறையுடன் சொன்ன ஒரு விஷயத்தை, இப்படித் தப்பர்த்தம் எடுத்துக்கொண்டு விட்டாரே என்பது மட்டும் மனதின் ஓரத்தில் சிறுவலியை உண்டு பண்ணியது. எனவே, நாம் சொல்ல வந்ததைத் தெளிவுபடுத்தாமல் இவரை விடப் போவதில்லை என்கிற முடிவுக்கு வந்தேன்.

இரண்டு நாள் கழித்து அவருக்கு போனைச் சுழற்றினேன். கேட்டுக்கொள்ளும் மனநிலை இருக்கிறதா என்பதை முதலில் நாடி பிடித்துப் பார்த்தேன். நாடி சரியாக இருந்தது. ஆரம்பித்தேன்.

"எந்த வேலையும் கேவலமில்லை என்பது எனக்கும் உடன்பாடான விஷயம்தான். ஆனால், நான் சொல்ல வந்த விஷயமே வேறு. பார்சல் கட்டுகிற வேலையை எவர் வேண்டுமானாலும் செய்யலாம். அதை ஒரு பையனைப் பிடித்துச் செய்யச் சொல்லிவிட்டு நீங்கள் புத்தகங்களின் விற்பனையை அதிகரிக்க என்ன செய்யலாம் என்பதில் கவனம் செலுத்தலாமே. அடுத்தடுத்த புத்தகங்களுக்குத் தலைப்பு முடிவு செய்யலாமே வருங்காலத் திட்டங்களை வகுக்கலாமே! எழுத்தாளர்களுடன் பேசி தயாரிப்பில் உள்ள புத்தகங்களுக்கு மெருகூட்டலாமே! புத்தகத் தயாரிப்பின் தரக்கட்டுப்பாட்டில் கவனம் செலுத்தலாமே!

நூலக ஆர்டரைப் பெறுவதற்கான முயற்சியில் இறங்கலாமே! விமாசனத்திற்காக பத்திரிகைகளுக்குப் புத்தகங்களை அனுப்பலாமே. கடிதப் போக்குவரத்துக்கள், கணக்கு வழக்குகளைக் கவனிக்கலாமே! இதையெல்லாம் பார்சல் கட்டும் பையனைச் செய்யச் சொல்ல முடியுமா? நீங்கள்தானே செய்யணும்? வேறு யார் செய்யமுடியும்?" என்று அவரைப் பிடித்துக் கொண்டேன்.

முத்தாய்ப்பாக ஒரு கருத்தைச் சொன்னேன். ''எரிப்பதற்கு என்று சவுக்குக் கட்டை கிடைக்கிறது. உரைத்துத் தேய்த்துப் பயன்படுத்துவதற்கென்று சந்தனக் கட்டை இருக்கிறது. நீங்கள் செய்வது எனக்கு எப்படி இருக்கிறது தெரியுமா? சந்தனக் கட்டையை அடுப்பில் வைத்து எரிப்பதைப் போல் இருக்கிறது.

உங்கள் நேரத்தின் மதிப்பு மிகமிக உயர்ந்தது. அதை, எவர் வேண்டுமானாலும் செய்து முடித்துவிடக்கூடிய செயல்களுக்காகப் பயன்படுத்தாதீர்கள். உங்களால் மட்டுமே முடியும் என்று நம்புகிற அருமையான செயல்களுக்கு மட்டும் பயன்படுத்துங்கள்."

மறுமுனையில் அவர் குரல் கிட்டத்தட்ட அடங்கிப்போன நிலையில், ஒன்றைச் சொல்லி என் குட்டி லெக்சரை முடித்துவைத்தேன். "நீங்கள் சிலை வடிக்கக்கூடிய ஆற்றல் உள்ள அற்புதமான சிற்பி. ஆனால் அதை விட்டுவிட்டு, அம்மியிலும். ஆட்டுக்கல்லிலும் புள்ளிகுத்திக் கொண்டிருக்கிறீர்கள்."

முடிவு எடுக்காமலே எல்லாமே ஒரு நாள் சரியாகும் என்று எதிர்பார்த்துக் கொண்டே இருந்தால்.............

அது ஒரு நாள் நிச்சயம் நிரந்தரமாக முடிந்து போகும்.

மாயச் சுடர் என்று இங்கு எதுவும் இல்லை............

நீ பற்ற வைத்தால் பற்றிக்கொள்ளும்..........

ஊதினால் அணைந்துவிடும்.

வலிகளைத் தாங்கும் விழிகள் எப்போதும் ஈரமாகத்தான் இருக்கும். ஈரமுள்ள இடத்தில்தான்விதைகள் துளிர்க்கும்

# அப்பாவுக்கு வயசு ஆயிடுச்சு!



என் அப்பா வயதாகிவிட்டார், நடந்து செல்லும்போது சுவரின் ஆதரவைப் பெறுவார். இதன் விளைவாக சுவர்கள் நிறமாற்றம் அடைந்தன, அவர் தொட்ட இடமெல்லாம் அவரது கைரேகைகள் சுவர்களில் பதிந்தன..

என் மனைவி இதை வெறுத்தார், சுவர்கள் அழுக்காகி வருவதாக அடிக்கடி புகார் கூறுவார்.. ஒரு நாள், என் அப்பாவுக்கு தலைவலி இருந்தது, அதனால் அவர் தலையில் சிறிது எண்ணெய் தடவினார்.. அதனால், நடந்து செல்லும்போது சுவர்களில் எண்ணெய் கறைகள் உருவாகின..

இதைப் பார்த்து என் மனைவி என்னைப் பார்த்து கத்தினாள்.. நான் என் அப்பாவைக் கத்தினேன், அவரிடம் முரட்டுத்தனமாகப் பேசினேன், நடக்கும்போது சுவர்களைத் தொடாதே என்று அறிவுறுத்தினேன்.. அவர் காயமடைந்ததாகத் தோன்றியது.. என் நடத்தையைப் பார்த்து நானும் வெட்கப்பட்டேன், ஆனால் அவரிடம் எதுவும் சொல்லவில்லை..

என் அப்பா நடந்து செல்லும்போது சுவரைப் பிடிப்பதை நிறுத்தினார்.. ஒரு நாள் அவர் சமநிலையை இழந்து கீழே விழுந்து இடுப்பு எலும்பு உடைந்து போனார்.. இடுப்பு அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவர் படுக்கையில் விழுந்து சிறிது நேரத்தில் எங்களை விட்டு பிரிந்து சென்றார்.. என் இதயத்தில் மிகுந்த குற்ற உணர்ச்சியை உணர்ந்தேன். அவருடைய வெளிப்பாடுகளை ஒருபோதும் மறக்கவும், சிறிது நேரத்திலேயே அவரது மறைவை மன்னிக்கவும் முடியவில்லை.. சில நாட்களுக்குப் பிறகு, எங்கள் வீட்டிற்கு வண்ணம் தீட்ட விரும்பினோம்.. ஓவியர்கள் வந்தபோது, அவரது தாத்தாவை மிகவும் நேசித்த என் மகன், ஓவியர்கள் என் தந்தையின் கைரேகைகளை சுத்தம் செய்து அந்தப் பகுதிகளை வரைய அனுமதிக்கவில்லை..

ஓவியர்கள் மிகவும் நல்லவர்களாகவும், புதுமையானவர்களாகவும் இருந்தனர்.. அவர்கள் என் தந்தையின் கைரேகைகளை அகற்ற மாட்டோம் என்றும், இந்த அடையாளங்களைச் சுற்றி ஒரு அழகான வட்டத்தை வரைந்து ஒரு தனித்துவமான வடிவமைப்பை உருவாக்குவோம் என்றும் அவருக்கு உறுதியளித்தனர்.. அதன் பிறகு இது தொடர்ந்தது. அந்த அச்சுகள் எங்கள் வீட்டின் ஒரு பகுதியாக மாறியது.. எங்கள் வீட்டிற்கு வருகை தரும் ஒவ்வொருவரும், சுவரில் உள்ள தனித்துவமான வடிவமைப்பைப் பாராட்டினர்.. காலப்போக்கில், நானும் வயதாகி விட்டேன்.. இப்போது நடக்க சுவரின் ஆதரவு எனக்கும் தேவைப்பட்டது. ஒரு நாள் நடக்கும்போது, என் தந்தையிடம் நான் சொன்ன வார்த்தைகளை நினைவில் வைத்துக் கொண்டேன், ஆதரவின்றி நடக்க முயற்சித்தேன்..

என் மகன் இதைப் பார்த்தான். உடனே என் அருகில் வந்து, நடந்து செல்லும்போது சுவர்களைத் தாங்கிப் பிடிக்கச் சொன்னான். நான் ஆதரவு இல்லாமல் விழுந்திருப்பேனோ என்று கவலைப்பட்டான். என் மகன் என்னைப் பிடித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். என் பேத்தி உடனடியாக முன்னோக்கி வந்து அன்பாக, அவள் தோளில் என் கையை வைக்கச் சொன்னாள். நான் கிட்டத்தட்ட அமைதியாக அழ ஆரம்பித்தேன்.

நான் என் தந்தைக்கு அதையே செய்திருந்தால், அவர் நீண்ட காலம் வாழ்ந்திருப்பார்.. என் பேத்தி என்னை அழைத்துச் சென்று சோபாவில் உட்கார வைத்தாள்.. பின்னர் அவள் தனது ஓவியப் புத்தகத்தை எடுத்து எனக்குக் காட்டினாள்.. அவளுடைய ஆசிரியர் அவள் வரைந்ததைப் பாராட்டி, அவளுடைய சிறந்த கருத்துக்களைக் கூறினார்.. அந்த ஓவியம் சுவர்களில் என் தந்தையின் கைரேகையைக் கொண்டிருந்தது. அவள் கருத்து "ஒவ்வொரு குழந்தையும் தங்கள் பெரியவர்களை அதே வழியில் நேசிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்."

நான் என் அறைக்குத் திரும்பி வந்து, என் மறைந்த தந்தையிடம் மன்னிப்பு கேட்டு, அதிகமாக அழுதேன்..

காலப்போக்கில் நாமும் வயதாகிவிடுவோம்.. நம் வீட்டில் பெரியவர்கள் இன்னும் இருந்தால், அவர்களைக் கவனித்துக்கொள்வோம். நம் குழந்தைகளுக்கும் நம் முன்மாதிரியாக அதையே செய்யக் கற்றுக் கொடுப்போம்.

(ஒரு அழகான செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்பு)

இந்தக் கதை என் இதயத்தைத் தொட்டது. மேலும், வயதாகி வரும் என் நண்பர்கள் மற்றும் அறிமுகமானவர்களுடன் பகிர்ந்து கொள்வதாக உணர்ந்தேன். மிகவும் நெகிழ்ச்சியானது.. நம்மில் பெரும்பாலோர் எப்போதாவது நம் வயதான பெற்றோருடன் இதே போன்ற தவறுகளைச் செய்திருக்கலாம். மாற்றிக் கொள்வோமே.

**– எஸ்.திருநாவுக்கரசு, காஞ்சீபுரம்**

# எம் பதில்கள்

**பதவி போனால் மரியாதை குறைகிறதே!**

*ப.பரந்தாமன், திருவள்ளூர்*

உண்மைதான். சில பேருக்கு பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மரியாதை இருக்கும். சில பேருக்கு பதவியில் இருக்கும் போது அவர்களால் கிடைக்கின்ற ஆதாயத்தை வைத்து மரியாதை இருக்கும். இதற்கு ஒரு கதை உண்டு. ஒரு தாசில்தார் ஆபீசின் பின்புறமுள்ள கிணற்றில் தவறி விழுந்து விட்டார். அவரைக்காப்பாற்ற ஊழியர்கள் அனைவரும் போராடினார்கள்.

ஒரே பரபரப்பு. ஒருவர் கயிறைக்கட்டி உள்ளே இறங்க முயற்சி செய்தார்.

இன்னும் சிலர் சட்டைகளைக்கழற்றி முடிச்சுப்போட்டு கிணற்றுக்குள் விட்டு, ஐயா, இதைப்பிடித்துக் கொள்ளுங்கள்" என்று கத்தினார்கள்.

பெண் ஊழியர்கள் கிணற்றைச்சுற்றி நின்று அழ ஆரம்பித்து விட்டார்கள்.

ஒவ்வொருவரும் தீவிரமாக தாசில்தாரை காப்பாற்ற முயற்சி செய்தார்கள்.

அந்த தாசில்தாரை பாதி அளவு மேலே தூக்கிக்கொண்டிருந்த சமயம் ,அந்தப் பக்கம் வந்த பியூன், இந்த ஆபீசருக்கு வேலை மாறுதல் ஆகி விட்டது.

புது தாசில்தார் வாசலுக்கு வந்து விட்டார். என்று தகவல் சொன்னார்...

அவ்வளவுதான்...

கிணற்றுக்குள் இருந்த தாசில்தாரை அப்படியே போட்டு விட்டு புது தாசில்தாரை வரவேற்க எல்லோரும் வாசலுக்கு ஓடி விட்டார்கள்...

அதிகாரம் மிக்க பதவிக்கு இருக்கும் மகிமை இது தான். அரசு பதவியாக இருந்தாலும் சரி கட்சி,அரசியல் பதவியாக இருந்தாலும் சரி அந்தப் பதவியை வைக்கும் போது எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை பொறுத்து தான் மரியாதை தொடரும் அல்லது குறையும்.

**மொழி பற்று அவசியம் தானே!**

*பொன்.வேலாயுதம், நெய்வேலி*

எத்தனை மொழிகளை கற்றுக் கொண்டாலும் தாய் மொழியை மறந்தவர்கள் செழித்ததாக வரலாறு இல்லை. மொழி என்பது மாந்த உலகிற்கு தொடர்பு கருவியாகத்தான் விளங்குகிறது ஆனால் தமிழ் மொழி மட்டுமே மாந்த உலகிற்கு உணர்ச்சியாகத் திகழ்கிறது... காரணம் மனிதன் தோன்றிய நாள் முதல் கையசைத்து காலசைத்து தனது தேவையை நிறைவு செய்ய எத்தணித்த போது... அவன் வாய் அசைத்து பேசிய போது வந்த மொழி அம்மா என்னும் அருந்தமிழே தவிர வேறு என்ன நாம் சொல்லவில்லை தொல்காப்பியம் முதல் இக்கால காப்பியம் வரை எடுத்து இயம்புகிறது உலக மாந்த உலகின் முதலில் தோன்றிய மொழி தமிழே என்பதை பாவாணர் வழியில் நாம் உணர்ந்தோம் இந்த நிகழ்வின் வழியில் தொடர்ந்து உணர்கிறோம் நாளையும் உலகின் பல்வேறு நிகழ்வுகளின் வழியாக உணர்வோம் அதனால் தான் மொழி தமிழ் மொழி உணர்வாகவும் உணர்வின் மூச்சாகவும் திகழ்கிறது ஆங்கிலத்தை கற்றால் எங்கு வேண்டுமானாலும் வேலை செய்யலாம் என்று சொல்வார்கள். மற்ற மொழிகளை கற்பதில் தவறில்லை அதே நேரத்தில் தாய் மொழியை மறக்க கூடாது.

**முதியவர்களுக்கு கேரள அரசு ஆணையம் அமைத்து இருக்கிறதே!**

*கே .வி .மணி தஞ்சாவூர்*

புறக்கணிப்பு, சுரண்டல் மற்றும்



ஆதரவின்மை உள்ளிட்ட முதியோர் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்த வளர்ந்து வரும் கவலைகளை அவசரமாக நிவர்த்தி செய்வதே மூத்த குடிமக்கள் ஆணையத்தின் நோக்கம். முதியோர்களுக்கான ஆணையம், முதியோர்களின் மறுவாழ்வை எளிதாக்குவதற்கும், அவர்களின் திறன்களை பொது மக்களுக்கு பயனுள்ளதாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதி செய்வதற்கும் திருவனந்தபுரத்தை தலைமையிடமாகக்கொண்டு நிறுவப்பட்டது.

இந்த ஆணையம் நீதித்துறை அதிகாரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. முதியோர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்குவதற்கு ஆணையம் பொறுப்பாகும். நாட்டிலேயே முதன் முதலாக கேரளத்தில் மூத்த குடிமக்கள் ஆணையம் அமைக்கப்பட்டது பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

### ரோபோ சங்கர் மறைவு குறித்து..

*எஸ்.எஸ்.சங்கர், சின்னமனூர்.*

சிரிப்பை மட்டுமே தங்களது அடையாளம் என வாழ்ந்த நடிகர் ரோபோ சங்கர், தனது 46வது வயதில் காலமானார். அவரது இழப்பு, திரையுலகை மட்டுமல்லாமல், அவரது குடும்பத்தினரையும், ரசிகர்களையும் மீளாத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. சென்னையில் வியாழக்கிழமை உயிரிழந்தார். மதுரையில் மேடைக் கலைஞராக தனது பயணத்தை தொடங்கி, வெள்ளித்திரை வரை உயர்ந்தவர் ரோபோ சங்கர்.சின்ன கதாபாத்திரங்களிலும் மக்கள் மனதில் இடம் பிடிக்கும் வண்ணம்



தன் திறமையை வெளிப்படுத்தியவர் ரோபோ சங்கர்.2005ஆம் ஆண்டு விஜய் டிவியில் தொடங்கிய 'கலக்கப் போவது யாரு' நிகழ்ச்சி மூலம் பிரபலமடைந்தவர்கள் ரோபோ சங்கரும், மதுரை முத்துவும். அவர் படித்த கல்லூரிக்கு அருகில் உள்ள கல்லூரியில் நான் படித்தேன். அவர் எனக்கு ஒரு ஆண்டு சீனியர். எங்கள் கல்லூரிக்கு பல முறை மேடை நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்துள்ளார். அப்போது முதலே அவரை தெரியும். உடலில் சாயம் பூசிக் கொண்டு மேடையில் நடிப்பார். பல மணி நேரங்கள் உடலில் சாயத்துடன் காத்திருந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்பார். கல்லூரிகள் மட்டுமல்லாமல் எத்தனையோ கிராமங்களில் மேடை ஏறி மக்களை சிரிக்க வைத்துள்ளார். அவரை போன்ற கடுமையான உழைப்பாளியை பார்க்க முடியாது" என்று ரோபோ சங்கர் குறித்து நெகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார்.கடுமையான நோயால் பாதிக்கப்பட்டு உயிர்மீண்டு வந்த ரோபோ சங்கர் மீண்டு வழக்கம்போல தனது கலைப் பயணங்களை தொடர்ந்த போது உடல்நிலை பாதிக்கப்பட்டு மறைந்தது அதிர்ச்சி அடைந்தது.

# வள்ளுவர் சொன்ன அன்னதானம்!

ஒரு குறள் ஒரு விளக்கம்!

பணம் சேர்க்கின்ற வங்கி எது?

பொருளைப் பாதுகாக்கும் கருவூலம் எது?

சொத்தை வைத்துப் போற்றும் இடம் எது?

காசை வைத்துக் காக்கும் இடம் எது?

எல்லாவற்றுக்கும் ஒரு விடைதான்.

அழிபசி தீர்த்தல் எனபதே விடை.

அன்னதானம் செய்துவிட்டால் போதும்.

அஃதல்ல பொருள்.

குறளைக் கேளுங்கள்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி.

யாருடைய பசி போக்க வேண்டும்?

அற்றாரின் பசி போக்க வேண்டும்.

முதல் சொல்லே அதுதான்.

பொருளற்றார்

வக்கற்றார்

திக்கற்றார்

திசையற்றார்

குலப்பெருமை அற்றார்

உயர்வற்றார்

கல்வி அற்றார்

நாணம் அற்றார்

அழகற்றார்

மானமற்றார்

உறுப்பு அற்றார்

என்ற வகையில் ஏதிலிகளின் அழி பசி போக்கிட வேண்டும்.



ஏதிலிஏதும் இலாதவர்.

இப்படித் தன்மையுள்ளோர் கண்டு அவரின் பசி போக்கிட வேண்டும்.

அழிபசி என்ற சொல் வினைத்தொகையாய் வந்து முக்காலத்தும் கொல்லும்.

அப்படி உள்ளவன் பசி ஆற்றுவதற்குத்தான் வள்ளல் பெருமான் அடுப்பைப் பற்ற வைத்தார்.

இப்போது அப்படியா?

இரண்டடுக்கு மாடி வீட்டைப் பூட்டிவிட்டுக் கணவன் மனைவி இணைந்து அன்னதான மண்டபம் ஏகும் இழிவு.

நன்கு சிந்தியுங்கள்.

ஏதும் இலார்க்குக் கொடுத்தால்தான் பணம் பாதுகாப்பாய் இருக்கும் என்கிறார் வள்ளுவர்.

வள்ளுவப் பாட்டன் சொன்னதும்

வள்ளலார் செய்ததும் சரிதானே!

அதுதான் புண்ணியம்.

அன்னதானத்தினால் அக மகிழ்வு வேண்டாம்.

யாருக்குச் சாப்பாடு.

ஊருக்குச் சாப்பாடு

என்பது போலித்தனமான புண்ணியம்.

அற்றார் அழிபசி தீர்ப்போம்.

அதுவே இறை இருப்பிடம்.

**- T.K. கருணாநிதி**
**திருவள்ளுவர் மன்றம்**

# சமைப்பவர்களின் அன்பு தரும் சுவை!

ஒரு முதியவர் நின்று கொண்டு தார்ரோட்டில் கொட்டிக்கிடக்கும் சாதத்தை பார்த்துக்கொண்டே நிற்கிறார். அவர் ஒட்டிக்கொண்டு வந்த 2 வீலர் பக்கத்தில் நின்றிருந்தது. அவர் கையில் காலி டிப்பன் பாக்ஸ் ஒன்று வைத்திருந்தார்.

கீழே கிடந்த உணவை வெறித்து பார்த்துக்கொண்டு அவர் சோகமாக இருப்பதை பார்த்து வழியில் சென்றவர் அவரிடம் பேச்சு கொடுத்தார்.

அந்த பெரியவருக்கு வயது அறுபதக்கும் மேல் இருக்கும். அவர் கொண்டு போன லன்ச் பேக் அறுந்து , கீழே விழுந்து, டிபன் பாக்ஸில் இருந்த உணவு எல்லாம் கொட்டிவிட்டது. சிலகாட்சிகளை பார்த்துவிட்டு அந்த இடத்தை நம்மால் கடக்க முடியாது. ஒரு இரண்டு வார்த்தை உச்சு கொட்டிவிட்டாவது சென்றால்தான் ஒரு சிலருக்கு திருப்தியாக இருக்கும்.

அதை போலவே அந்த வழியில் சென்றவரும் ஞ் “ஐயோ கீழே கொட்டிருச்சா”. என்றார்.

அவர் தலையை மட்டும் அசைத்தார். அவர் கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது. உடைந்து போய் நின்றார்.

“சார்... அய்யா... இதுக்குபோய் ஏன் கலங்குறீங்க? தப்பா நினைக்க வேண்டாம். லன்ச்க்கு பணம் வேணா தரேன். விடுங்க அய்யா கொட்டியதை அள்ளவா முடியும்.! உங்க முகத்தை பார்க்க கஷ்டமா இருக்கு..” என்று வந்தவர் சொன்னார்.

சொன்னவரை ஒரு பார்வை பார்த்துட்டு, அவர் பர்ஸ் எடுத்து காட்டினார். பர்ஸ் நிறைஞ்சு இருந்தது.

“என் ஒய்ப் ஆசை ஆசையா காலையில் ஐந்து மணிக்கு எழுந்து எனக்கு பிடிச்சதை சமைச்சு கொடுப்பா சார். மூட்டுவலி – சுகர் இருக்கு. உடம்புக்கும் முடில அவளுக்கு. மதியம் போன் பண்ணுவா சார் “எப்படி இருக்கு? டேஸ்ட் என்ன? உப்பு சரியா இருக்கா? நல்லா இருக்கா?னு கேப்பா சார்ஞ்.”

அதற்கு மேலே பேச முடியவில்லை. அவருக்கு வார்த்தை வரல. அவர் பேசியது ஒரு சில வார்த்தைகள் தான் ஆனால் ஒராயிரம் அர்த்தம் சொல்லியது.

கீழே கிடந்த உணவை அவர் வாஞ்சையா அள்ளி ஒரு கேரிபேக்கில் போட ஆரம்பித்தார். “ரோட்டில் கிடந்தா வேஸ்ட் ஆகிரும். ஏதாவது நாய்க்கு வச்சா சாப்பிடும்ஞ்” தனக்குத்தானே பேசிக்கொண்டார்.

சோறு என்பது ஒரு பொருள் அல்ல. அதை



சமைப்பவர்களின் அன்பு.

நம்மில் பலர் எத்தனை முறை உதாசீனம் செய்திருக்கிறோம்.

“மதியம் பாக்ஸ் ரெடியா இருக்கு. இன்னிக்கி அவியல் செஞ்சேன்.”

“வேண்டாம்... ஆபீசில் சாப்பிட்டுகிறேன்.”

நைட் ....”வாங்க புதினா சட்னி இருக்கு .சாப்பிடலாம்.”

“வெளில சாப்பிட்டுட்டேன்”.

“ஒண்ணே ஒன்னு டேஸ்ட் பாக்கலாமே”.

“வயிறு புல்லா இருக்கு. வேண்டாம்.”

எத்தனை முறை நோகடிச்சு இருக்கிறோம். மிக பெரிய உதாசீனம் அது!

சாப்பாடுதானே வயிறு நிறைஞ்சா போதாதா? அப்டி இல்லை. நாம சாப்பிடுற சாப்பாட்டில் உப்பு இருக்கோ, காரம் இருக்கோ, புளிப்பு இருக்கோ.. தெரியாது ஆனால் சமைப்பவர்களின் அன்பு இருக்கு.!

சாப்பிட்டா நிறைவது நம்ம வயிறு மட்டும் இல்லை. அவர்களின் மனசும் சேர்ந்தே நிறைகிறது.

கொஞ்சம் பாராட்டலாம். அட பாராட்ட கூட வேண்டாம். ஒரு “தேங்க்ஸ்” சொல்லி பழகலாம். “நல்லா இருக்கு, தேங்க்ஸ்பா” என்று சொல்லலாமே.!

இரண்டு மணி நேர அடுப்படி போராட்டம் உங்களின் ஒரே ஒரு வார்த்தையில் மகிழ்ச்சியாக மாற்றுமே...

– பூவை வெங்கடேசன்

# மருந்து இல்லாத மருத்துவம் 15!



- ✓ உடற்பயிற்சி
- ✓ பசி எடுத்தால் மட்டும் உண்பது
- ✓ இயற்கை உணவு உண்பது
- ✓ சிரிப்பு
- ✓ நல்ல தூக்கம்
- ✓ பச்சைக் காய்கறிகள் உண்ணுவது
- ✓ சூரிய ஒளி
- ✓ ஒருவரிடம் அன்பாய் இருப்பது
- ✓ நன்றி உணர்வோடு இருப்பது
- ✓ தவறை மன்னிப்பது
- ✓ தியானம்
- ✓ இறைவனை நினைப்பதும் துதிப்பது
- ✓ மனதிற்கு பிடித்தமான பாடல் பாடுவது கேட்பது மற்றும் இசைக்கு நடனம் ஆடுவது
- ✓ சரியாகச் சிந்திப்பதும்
- ✓ சரியான மனநிலையில் இருப்பது
- ✓ நல்ல நண்பர்களுடன் இருப்பது


## மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

| |
|---|
| ஆயுள்சந்தா : ரூ.2400.00 |
| ஆறாண்டு சந்தா : ரூ.1440.00 |
| ஆண்டு சந்தா : ரூ.240.00 |

மேலும் விபரங்களுக்கு: 044-23743007/8

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

| | | |
|---|---|---|
| Name | : | MITRA TIMES |
| A/C no | : | 50200012576292 |
| Bank | : | HDFC Bank |
| Branch | : | T.Nagar |
| IFSC | : | HDFC0000206 |

# வக்கீல் முருகானந்தம்!

**எனது மூத்த அண்ணன் கவிஞர், திருத்தணி நீதிமன்ற வழக்கறிஞர், தி.மு.க மேடைப்பேச்சாளர், "தீப்பொறி" என்ற மாதமிரு முறை இதழை திருத்தணி யில் நடத்திய பத்திரிகையாளர். பன்முகத்தன்மை கொண்ட திரு.கி.முருகானந்தம் பி.ஏ.பி.எல் அவர்களின் 32 வது நினைவு தினம் 17.09.2025.**



*திருவள்ளூர்மாவட்டம்திருத்தணிவட்டம் மணவூர் கிராமத்தில் கிஷ்ட முதலியார் என்று ஊர் மக்களால் அழைக்கப்படுபவர் 5ரூபாய் வாங்கிக்கொண்டு பத்திரப்பதிவு (டாக்குமெண்ட் ரைட்டர்) முடித்துக் கொடுத்த சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த அ. கிருஷ்ணசாமி அவர்களின் மூத்த மகன். உடன் பிறந்த தம்பிகள் ஜெகதீசன், விடாரண்யம், பூபாலன் , தங்கை புனிதா.*

*ஐந்தாம் வகுப்பு முறை வரை உள்ளூரில் படித்தார். 1966 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு சேர்க்கப்பட்ட திரு .முருகானந்தம் தினமும் கிராமத்தில் இருந்து சென்னைக்கு ரயில் மூலம் வந்து போக முடியாது என்பதால் சென்னை நைனியப்பன் நாயக்கன் தெருவில் உள்ள சென்னபுரி அன்னதான சமாஜம் என்ற மாணவர்கள் ஹாஸ்டலில் சேர்க்கப்பட்டார். பதினோராம் வகுப்பு வரை படித்த நாட்களில் இங்கு தங்கி படித்தார் என்பது குறிப்பிடத்தக்கது . ஹாஸ்டலில் இருந்து 100 அடிக்கு அருகாமையில் கந்தகோட்டம் என வழங்கும் கந்தசாமி கோயில் அமைந்திருந்ததால் தினந்தோறும் முருகன் கோயிலுக்கு சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பள்ளிகளின் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் பங்கேற்ற அவர்*

*1970 ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பு படிக்கும் போது குருநானக் நூற்றாண்டு விழா குறித்த பேச்சு போட்டியில் மாநில அளவில் முதல் பரிசு பெற்றார். இதற்கான அரசு விழாவில் அன்றைக்கு கவர்னராக இருந்த உஜ்ஜல் சிங் , கல்வி அமைச்சராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் பங்கு பெற்று பரிசுகளை வழங்கினார்கள். வெள்ளி கோப்பை ஒன்றும் 500 ரூபாய் ரொக்கமும் வழங்கப்பட்டது. அன்றைக்கு 500 ரூபாய் என்பது இன்றைக்கு ஐந்து லட்ச ரூபாய்.*

*அது எப்படி என்று கேட்பவர்கள் உண்டு அவர்களுக்காக அன்றைக்கு ஒரு சவரன் 360 ரூபாய். அன்றைக்கு டீ 7பைசா.இன்றைய விலைக்கு ஒப்பிட்டு பாருங்கள் புரிந்து கொள்வீர்கள்.*

*உயர்நிலைப் பள்ளி படிப்பை முடித்த உடன் 1973 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. சேர்ந்தார்.*

இவருக்கு சீனியர் கவிஞர் வைரமுத்து. இலக்கிய மேடைகளில் முருகானந்தம் வலம்புரி ஜான் கவிஞர் வைரமுத்து கவிஞர் பொன்னி வளவன் போன்றவர்களோடு உரையாற்றி இருக்கிறார். சென்னை கிருத்துவக் கல்லூரியில் நடந்த பேச்சு போட்டியில் முதல் பரிசை பெற்று அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் கரங்களால் பரிசு பெற்றவர். பின்னர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்தார். படிக்கும் போதே சட்டக் கல்லூரி மாணவர் தி.மு.கவில் சேர்ந்தார். இவரது பேச்சு திறமையை பாராட்டி அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பல்வேறு வாய்ப்புகளை வழங்கினார். வருடம் தோறும் ஜனவரி 25 ஆம் தேதி தி.மு.கவின் சார்பில் மொழிப்போர் தியாகிகள் கூட்டம் நடைபெறும். 1974, 75 ஆகிய வருடங்களில் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகள் கூட்டத்தில் முதல்வர் கலைஞர் தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது. அமைச்சர்கள் க.ராஜாராம், பண்ருட்டி ராமச்சந்திரன், செ. மாதவன் ஆகியோர் அணிகளாக தலைமையேற்று நடந்த அந்த கூட்டத்தில் அன்றைக்கு பேசியவர்கள் துரைமுருகன் ரகுமான் கான் வை.கோபாலசாமி(வை.கோ) அண்ணன் முருகானந்தம் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து தி.மு.க மேடைகளில் தஞ்சை கூத்தரசன் ஏற்பாட்டில் நடைபெறும் பட்டிமன்றங்களில் கவிஞர் பொன்னி வளவன், புலவர் ஆடலரசு, கவிஞர்குடியரசு, என்.வி .என் செல்வம் ஆர் எஸ் பாரதி எழும்பூர் கு.வீராசாமிசிங்கார சடையப்பன் சாமி நாகப்பன் போன்ற பேச்சாளர்கள் வரிசையில் இவரும் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1976 ஆம் ஆண்டு தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்ட போது கட்சியின் முன்னணி தலைவர்கள் கைது செய்யப்பட்டபோது முருகானந்தம் சொந்த ஊரான மணவூர் வந்துவிட்டார். அங்கே சில நல்லவர்கள் பக்கத்தில் இருந்த திருவாலங்காடு போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் செய்து இவர் வந்திருக்கும் செய்தியை சொல்ல கைது செய்து அரசியல் கைதியாக திருத்தணி சிறையில் அடைத்தார்கள். அப்போது நான் திருத்தணியில் பி.யூ.சி படித்துக் கொண்டிருக்கிறேன். போலீஸ் அனுமதிக்கும் நேரத்தில் அவரை சிறைச்சாலையில் சென்று பார்த்து வருவேன் அப்போது என்னுடைய அம்மா கொடுக்கின்ற பழைய சாதத்தை பொட்டலம் செய்து அவரிடம் கொடுத்து விட்டு வருவேன் அதை சக கைதிகளோடு சாப்பிட்டதாக சொல்லி மகிழ்வார்.

ஒரு மாதத்திற்கு பிறகு விடுதலை செய்யப்பட்டார். எந்த திருத்தணியில் கைது செய்யப்பட்டு சிறை அடைக்கப்பட்டாரோ அன்று திருத்தணியில் வழக்கறிஞராக 1978 முதல்1993 வரை பணியாற்றினார். உடல்நிலை பாதிக்கப்படாமல் இருந்தால் இந்த தமிழகம் பேசப்படுகின்ற ஒரு தலைவராக இருந்திருப்பார்.

ஆனாலும் 32 வருடங்களுக்கு பிறகு அவரை என்றும் நினைவு கூறுகிற அளவுக்கு அவருடன் சமகாலத்தில் பயணித்த நீதியரசரும் எங்கள் உறவினருமான திரு. து.அரி பரந்தாமன், ஓய்வு பெற்ற நீதி அரசர் திரு இராஜ. இளங்கோ, மூத்த வழக்கறிஞர் திரு சந்திரன் பாஸ்கர் மார்த்தாண்டன் ஆகியோரிடம் பேசும்போது நினைவலைகள் வந்து போகும்.

அவர் திருத்தணியில் இருந்த போது பொதுமக்களிடம் அவர் எப்படி பழகினார் என்பதற்கு அவருடன் பணியாற்றிய திரு கிஷோர் ரெட்டி வக்கீல் அவர்கள் தனது தெருவின் பெயருக்கு வக்கீல் முருகானந்தம் தெரு என்று பெயர் வைத்திருக்கிறார்.

திருத்தணி மலைக்கு மேலே ஏறுவதற்கு முன்பு இடது புறம் உள்ள தெருவின் பெயர். "வக்கீல்" என்ற பெயர் உள்ளவரை அவர் பெயர் நிலைத்திருக்கும்.

**கி.விடாரண்யம்**

செய்தி ஆசிரியர்

மித்ரா டைம்ஸ்

# மித்ரா டைம்ஸ் ஆசிரியர் / மித்ரா குழும நிறுவனர் / பீப்பிள் ஸ்டார் எம்.எஸ்.மூர்த்திக்கு பிறந்தநாள் வாழ்த்து!






## ஆசிரியர் பங்கேற்ற திருமண நிகழ்ச்சி



POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 October 2025
MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/2025-2027
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2025-2027




Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY